₹10

fmpb

# அறைகூவல்

Volume 54 | Issue 11 | November 2024

# நம்பிக்கையின் தேவன்

## தேவன் மனுஷனை நம்புவதற்கு அவன் எம்மாத்திரம்?




“நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள்; எண்ணப்படுவதற்கு **அவன் எம்மாத்திரம்.**”

ஏசாயா 2:22

**நான் எம்மாத்திரம்**

2 சாமுவேல் 7:18




# ஆரம்ப வரிகள்...

## நம்பிக்கையின் நங்கூரம்

நமது கிறிஸ்தவ வாழ்வில் நாம் அடிக்கடி கேட்கும் வார்த்தைகளில் விசுவாசம் மற்றும் நம்பிக்கை, போன்றவைகளுக்கிடையிலான வித்தியாசத்தை நாம் பல நேரங்களில் உணருவதில்லை. மூன்று சிறிய உதாரணங்கள் மூலம் இதை அறிந்து கொள்ளலாம்.

முதலாவது, ஒரு கிராமத்தினர் மழைக்காக ஜெபிக்க ஆலயத்தில் கூடினார்கள். அவ்வாறு ஜெபிக்க வந்தவர்களில் ஒரு சிறுவன் கையில் மாத்திரம் குடை இருந்தது. அதுவே விசுவாசம் (Faith). எபி. 11:1இல் விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. இரண்டாவது, சிறு குழந்தையை நம் தலைக்குமேல் தூக்கிப்போட்டு விளையாடும் பொழுது அது நம்மைப் பார்த்து சிரிக்கும். ஏனென்றால் நாம் அதை பிடித்துவிடுவோம் என்ற நம்பிக்கை அக்குழந்தைக்கு உண்டு. அது நம்பிக்கை (Trust). அசைக்கமுடியாத இப்படிப்பட்ட நம்பிக்கையை நாம் எல்லா நேரமும், எல்லா சூழ்நிலைகளிலும் தேவன்மீது மட்டும் வைக்கும்படி அவர் எதிர்ப்பார்க்கிறார் (சங். 118:8). இந்த நம்பிக்கையை மனிதர்கள், பணம், திறமை அல்லது அனுபவத்தின் மீது வைக்கும்போது நாம் தோல்வியைத் தழுவுகிறோம், மனந்தளர்ந்து, ஏமாற்றமடைகிறோம். மேலும் தேவ சித்தத்தைவிட்டு விலகிப்போக நாமே காரணமாகிவிடுகிறோம். மூன்றாவது, இரவு நாம் படுக்கைக்குச் செல்லும்போது அடுத்தநாளைக் காணுவோம் என்ற எந்த நிச்சயமும் இல்லை, ஆனாலும் நாம் அதிகாலை 5 மணிக்கு அலாரம் வைத்து தூங்குகிறோம். அதுவும் நம்பிக்கையே (Hope). இம்மாதம் இந்த நம்பிக்கை (Trust) என்ற வார்த்தையின் உட்கருத்தை தியானிக்க இருக்கிறோம்.

நாம் பலவேளைகளில் நம் சகமனிதர்களிடம் அவர்கள் ஆலோசனையையும், ஒப்புதலையும் பெற விரும்புகிறோம். படிப்பு, வேலை, திருமணம் போன்றவற்றை தெரிந்தெடுப்பதில் தேவனை நம்புவதை விட்டுவிட்டு மனிதர்களை நம்புவதால் மோசமான பின்விளைவுகளையும் சந்திக்கிறோம். நாம் ஞானமாய் நடந்தால் சங்கீதக்காரனைப்போல 'மனுஷன் மாயைக்கு ஒப்பாயிருக்கிறான்' (சங். 144:4) என்பதை உணர முடியும். எனவே நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுவோம் (ஏசா. 2:22) ஊழியப் பாதையிலும் மனிதர்களை நம்பி நம் அடிகளை எடுத்துவைக்காமல் தேவனை மட்டுமே நம்பி நாம் ஒவ்வொரு நாளும் நம் வாழ்வை நகர்த்தும்போது நாம் அசைக்கப்படாமலும், வெட்கப்படாமலும் இருப்போம்.

தாவீது தன் வாழ்வில் நம்பிக்கையைக் குறித்து அதிகமாக பாடுவதை சங்கீதத்தில் வாசிக்கிறோம். தாவீது கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பார்த்து சங்கீதம் 34:8இல் அவர் மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான், என்றும் உன் வழிகளை கர்த்தருக்கு ஒப்புவித்து அவர் மீது நம்பிக்கையாயிரு என்றும் கூறுகிறார். தாவீதின் சந்ததியில் பிறந்த எசேக்கியா ராஜாவின் நம்பிக்கையைக் குறித்து தேவன் சொல்லும்போது "அவனுக்கு பின்னும், அவனுக்கு முன்னும் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை" என்பதை 2 இராஜ. 18:5ல் வாசிக்கிறோம். ஆகவே நம்முடைய நம்பிக்கையை நங்கூரமான இயேசு கிறிஸ்துவின் மேல் மட்டுமே வைத்து முன்செல்வோமானால் வாழ்க்கை என்னும் பயணத்தில் நாம் சமாதானதோடு பயணிக்கலாம். கர்த்தர் தாமே நமக்கு உதவி செய்வாராக!

**– மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

**“உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.”** நீதிமொழிகள் 3:5,6

**வாழ்வின் விளிம்பிற்கு தேவன் உங்களைத் தள்ளும்போது அவரை முழுமையாக நம்புங்கள். ஒன்று அவர் உங்களைப் பிடிப்பார். அல்லது பறக்க கற்றுக்கொடுப்பார்.** – யாரோ

**“மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம். பிரபுக்களை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்.”** சங்கீதம் 118:8,9

**உங்கள் வேதனைக்கு ஒரு நோக்கமும், போராட்டத்திற்கு ஒரு காரணமும், நம்பிக்கைக்கு ஒரு வெகுமதியும் தேவன் வைத்துள்ளார். அவரை நம்புவதை விட்டுவிடாதிருங்கள்.** – யாரோ

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

### நமது தரிசனம்

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

### நமது ஊழியம்

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**

ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |

*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர், சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுச்செயலாளரிடமிருந்து...



சந்திக்கப்படாத மக்களை சந்திக்கும் இயக்கத்தின் அன்பு பங்காளர்களே!

எபேசியர் நிருபத்தின் ஆறாம் அதிகாரத்தின் இரண்டு வசனங்கள் மூலம் பரிசுத்த ஆவியானவர் என்னுடன் தெளிவாக பேசினார். 6:8 இவ்வாறாக கூறுகிறது, “மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்” நாம் செய்பவற்றை கர்த்தருக்கென்றே முழுமனதோடு செய்ய பரிசுத்த ஆவியானவர் வழிகாட்டுகிறார். நமது வாழ்வை உலகபிரகாரமானது மற்றும் ஆவிக்குரியது என இரு பிரிவுகளாகப் பிரிக்கவியலாது. நாம் செய்கிற அனைத்து பணிகளும் முழுமனதுடன் செய்யப்பட வேண்டும். ஏனெனில் செய்கிற அனைத்தும் அவருக்காகவும், அவர் நாம மகிமைக்காகவுமே செய்கிறோம். 6:10 வசனம் கூறுகிறது, “கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.” கர்த்தருக்குள்ளும் அவரின் வல்லமைக் குள்ளும் பலப்பட வேண்டும் என்று பரி. பவுல் எபேசு சபையின் விசுவாசிகளுக்கு எடுத்துரைக்கிறார். கர்த்தரின் வல்லமை யிலும் மேலான வல்லமை ஏதுமில்லை. கர்த்தருக்குள் நாம் எவ்வளவு பாதுகாப்பாக, வல்லமையாக இருக்கிறோம் என்பதனை இது எடுத்துரைக்கிறது. நாம் வலுவாக இருப்பதற்குத் தேவையான ஆயுதங்கள் பற்றி பின்வரும் வசனங்களில் அவர் கூறுகிறார். நாம் அனைத்தையும் அவருக்காக செய்யவும், அவரிலும், அவரது வல்லமை யிலும் நிலைத்திருக்கவும் தேவனின் சர்வாயுதவர்க்கத்தைப் பெற்றுக்கொள்ளவும் கிருபை ஈவாராக!

**திருநெல்வேலி அலுவலகம் மங்கலப் படைப்பு:** திருமதி மணி செல்லையா (திருநெல்வேலி) அவர்கள் ஈகையாக அளித்த நிலத்தில் கட்டப்பட்ட அலுவலகம் மற்றும் ஊழியரின் வீடு செப்டம்பர் 18ஆம் தேதியன்று நம் இயக்கத் தலைவர்கள், ஆதரவாளர்கள் பங்கெடுக்க “ஆனந்த பவன்” என்ற பெயரில் மங்கலப்படைப்பு செய்யப்பட்டது. பழையக் கட்டடம் சிதிலமடைந்த நிலையில் இருந்ததால் இந்த புதிய கட்டடம் தேவையான ஒன்றாக இருந்தது. இந்தத் திட்டத்தினை குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே நிறைவேற்றிய திருநெல்வேலி இயக்கத் தலைவர்களின் ஆதரவிற்காக நன்றி நவில்கிறோம்.

**219வது செயற்குழு கூட்டம்:** இயக்கத்தின் செயற்குழு கூட்டம் கடந்த செப்டம்பர் 21ஆம் தேதி சென்னையில் சிறப்பாக நடைபெற்றது. 2023-24ஆம் ஆண்டுக்கான இறுதி வரவு செலவு அறிக்கையினை பொதுக்குழுவின் பார்வைக்கு பரிந்துரைக்க செயற்குழுவிற்கு தேவன் உதவினார்.

**2024ஆம் ஆண்டுக்கான பொதுக்குழு:** 2024ஆம் ஆண்டுக்கான பொதுக்குழு கடந்த செப். 22ஆம் தேதி சென்னையில் நடைபெற தேவன் கிருபை செய்தார். இயக்கத்தின் உபதலைவர், நிதிகாவலர் மற்றும் புது செயற்குழுவை நியமிக்கவும் பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றவும் தேவன் தமது ஞானத்தால் நடத்தி, அவரது சித்தத்தை நிறைவேற்ற பொதுக்குழுவிற்கு உதவி செய்தார்.

**துறை செயலர்கள் கூடுகை:** உபவாச ஜெபத்திற்காகவும், திட்டமிடுதல்களுக்காகவும் துறை செயலர்கள் கூடுகை சென்னையில் இரண்டு நாட்கள் நடைபெற்றது. தேவனின் அளவிடமுடியாத கிருபையினால் ஜெபமும், திட்டமிடுதலும் சிறப்பாக நடைபெற கர்த்தர் உதவி புரிந்தார்.

**வேற்று கலாச்சார தொடர்பு பயிற்சி:** நமது தேசிய ஊழியர் பயிற்சி மையத்தில் (NIM) மிஷனெரிகளுக்காக வேற்று கலாச்சாரத்தில்

சுவிசேஷம் அறிவிப்பது (CCC) பற்றி வகுப்பு எடுக்க தேவன் கிருபை புரிந்தார். அர்ப்பணமுள்ள ஊழியர்களை இயக்கத் திற்குத் தந்த தேவனுக்கு நன்றி கூறுகிறோம்.

**13வது கர்நாடகா மாநில முகாம்:** அக்டோபர் 11 – 13 வரை பெங்களூர் மாநகரில் கர்நாடகா மாநில முகாம் நடைபெற தேவன் கிருபை செய்தார். கர்நாடகா மிஷனெரிகளும், தலைவர்களும் இந்த முகாமை சிறப்பாக நடத்தித் தந்தனர். 827 நபர்கள் கலந்து கொண்ட இந்த முகாமின் தொடக்க அமர்வில் பங்குகொள்ள கர்த்தர் எனக்கு கிருபை அருளினார்.

**பூனா முன்னேற்றப்பணிக் கூட்டங்கள்:** பூனாவிலுள்ள முன்னேற்றப்பணி ஊழியர் மற்றும் ஜெபக்குழுத் தலைவர்களுடன் இணைந்து அக்டோபர் 12-13 தேதிகளில் கூட்டங்கள் நடத்திட தேவன் நல்சந்தர்ப்பம் ஈந்தார். 12ஆம் தேதி நடைபெற்ற குடும்பக் கூடுகை, தலைவர்கள் கூடுகையிலும் மற்றும் 13ஆம் தேதி மூன்று ஆலயங்களிலும் தேவ செய்தி அளித்தேன். சிறப்பாகவும், திறம்படவும் இந்தக் கூட்டங்களை ஒழுங்கு செய்திருந்தனர்.

**ஹூப்ளி பிராந்திய வெள்ளி விழா கூட்டம்:** கர்நாடகா மாநில ஹூப்ளி பிராந்திய ஊழியம் தன் 25 வருடத்தை நிறைவு செய்திருக் கிறது. இதனையொட்டி மிஷனெரிகளும், விசுவாசிகளும் இணைந்து அக்டோபர் 17ஆம் தேதி கதக் மாவட்டத்தில் ஒருநாள் கூடுகை ஏற்பாடு செய்திருந்தனர். தேவனு டைய உண்மைத்துவத்திற்கு நன்றி சொல் லும்வண்ணம் இந்தக் கூடுகையில் திரளான விசுவாசிகள் கலந்துகொண்டனர்.

**நவம்பர் மாத ஊழியங்களுக்காக உங்கள் ஜெபம் வேண்டுகிறேன்**

**ஹரியானா மற்றும் உத்தரகாண்ட் மாநில ஊழியங்கள்:** நவம்பர் முதல் வாரம் ஹரியானா மற்றும் உத்தரகாண்ட் மாநில ஊழியர்களையும், பணித்தளங்களையும் பார்வையிட இருக்கிறேன்.

**இயக்கத் தலைவர்கள் நியமனம்:** இயக்கத்திற்காக உழைத்து ஓய்வுபெறும் இயக்கத் தலைவர்களுக்கு நன்றி கூறி புதிய தலைவர்களை வரவேற்கும் நிகழ்வு நவம்பர் 9ஆம் தேதி தலைமை செயலகத்தில் நடைபெறவிருக்கிறது.

**NMC ஆலோசனைக் கூட்டம் – ஹைதராபாத்:** நவம்வர் 13–15 தேதிகளில் ஹைதராபாத் மாநகரில் தேசிய மிஷனெரிகள் ஆலோசனைக் கூட்டம் நடக்கவிருக்கிறது.

**ஊழிய ஆலோசனைக் கூட்டம்:** நவம்பர் 20–21 தேதிகளில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மண்டல மற்றும் துறை செயலர்கள் பங்குபெறும் ஊழிய ஆலோசனைக் கூட்டம் நடக்கவிருக்கிறது.

**பணித்தள மண்டல செயலர்கள் கூடுகை:** நவம்பர் 25-26 தேதிகளில் பணித்தள செயலரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பணித்தள மண்டல செயலர்கள் கூடுகையில் தேவனுக்கு சித்தமானால் நானும் பங்கு கொள்கிறேன்.

**பணி முடித்து செல்லும் தலைவர்களுக்கு நன்றி:** நம் இயக்கத்தில் கடந்த ஆறு ஆண்டுகளாக இருமுறை தலைவராக திரு. ரெஜினால்ட் பிரபாதாஸ் அவர்களையும், இருமுறை உப தலைவராக திரு. ஜேம்ஸ் தர்மபாலன் அவர்களையும் பெற்றது நமது பெரும் பாக்கியம். அக். 31-ம் தேதி அவர்களின் பொறுப்புக்கான காலம் முடிவடைகிறது. இயக்கத்தின் கடினமான காலக்கட்டங்களிலும், கொரோனா போன்ற கொள்ளைநோயின் காலத்திலும் இணைந்து நின்று பணியாற்றிய இவர்களுக்கு மிஷனெரிகள் மற்றும் ஆதரவாளர்கள் சார்பாக இயக்கமாக நன்றி நவில்கிறோம். அவர்களின் நீடிய நல்வாழ்விற்காக, கனிதரும் தொடர் ஊழியங்களுக்காக ஜெபித்து அவர்களுக்கு வாழ்த்து கூறுகிறோம்.

**புதிய இயக்கத் தலைவர்களை வரவேற் கிறோம்:** பொதுக்குழு ஒருமனதோடு திரு. ஜாண் சாமுவேல் அவர்களை தலைவராகவும், திரு. சாம் பொன்னையா அவர்களை உப தலைவராகவும் நவம்பர் 1 முதல் மூன்று ஆண்டுகளுக்கு நியமித்தி ருக்கிறது. வெற்றிகரமாக முதல் மூன்று ஆண்டு காலத்தை முடித்த திரு. நெல்சன் அவர்களை நிதிகாவலராக அடுத்த

மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்திருக்கிறது. இவர்கள் இயக்கத்தின் நீண்டகால ஜெபக்குழு தலைவர்களாகவும், பல்வேறு நிலைகளில் இயக்கத்தின் பொறுப்புகளை நிறைவேற்றினவர்களுமாக இருக்கின்றனர். தேவன் தந்தருளின தரிசனத்தை நிறைவேற்றும்வண்ணம் தேவனால் அருளப்பட்ட இந்தப் பொறுப்பினை நிறைவேற்ற இயக்கத்தின் மிஷனெரிகள் மற்றும் ஆதரவாளர்கள் சார்பாக அவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம். பணி முடித்து செல்லும் மற்றும் பணியாற்ற வரும் தலைவர்களுக்காக உங்கள் ஜெபத்தை எதிர்ப்பார்க்கிறோம்.

**புதிய செயற்குழு உறுப்பினர்களுக்கு வரவேற்பு:** தற்போதுள்ள செயற்குழுவின் பணிகாலம் அக். 26 உடன் முடிவுக்கு வருவதால் புதிய செயற்குழு உறுப்பினர்களை மூன்று ஆண்டுகளுக்கு பொதுக்குழு நியமித்திருக்கிறது. சேவையாற்றிச் செல்லும் செயற்குழு உறுப்பினர்களுக்கு நன்றி கூறும்வேளையில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள செயற்குழு உறுப்பினர்களை இயக்கம் மனப்பூர்வமாக வரவேற்கிறது. பழைய மற்றும் புதிய செயற்குழு உறுப்பினர்களுக்காக ஜெபித்துக் கொள்ள உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

இயக்கத்தின் தலைவர்கள் மற்றும் பொதுக் குழுவின் தேர்வுக்காக ஜெபித்த உங்களுக்கு நன்றியும், பாராட்டுதலும் உரித்தாகுக. இயக்கத்தின் தலைவர்களுக்காகவும், செயற்குழு மற்றும் 50 பொதுக்குழு உறுப்பினர்களுக்காகவும் தொடர்ந்து ஜெபித்துக்கொள்ள உங்களை பட்சமாய் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய ஜெபத்தினாலும், ஒன்றிணைந்த முயற்சியினாலும் ஊழியத்தில் முன்னேறிச் செல்வோம். உங்கள் அனைவரையும் எங்கள் ஜெபத்தில் நினைவு கூறுகிறோம்.

தேவ ஊழியத்தில் உடன் ஊழியன்,



**அருட்திரு. S. ஜாண் பெர்லின்**



# நம்பிக்கையின் தேவன்

வாழ்க்கை என்பது ஒரு பயணம். பொதுவாக நாம் வாகனங்களில் பயணிக்கும் போது அவ்வாகனங்கள் எதுவாயிருந்தாலும் அதன் செயல்படும் தன்மையை சோதித்துப்பார்த்து உறுதி செய்தப்பின் பயணத்தை மேற்கொள்வதில்லை. ஆன்லைனில் முன்பதிவு செய்யும்போதுகூட வாகனத்தை நேரில் பார்க்காமலேயே நம்பிக்கையோடு நம்முடைய பயணத்தைத் தொடர முன்வருகிறோம். வாகனத்தை ஓட்டுகிறவர்களையோ, வாகனத்தையோ நம்பி நாம் பயணிக்காமல் தேவனையே சார்ந்து பயணிக்கிறோம் என்பதுதான் உண்மை. அநேக சந்தர்ப்பங்களில் நமது நம்பகத்தன்மையை இழப்பதற்கான காரணம் என்னவென்றால் தேவனை சார்ந்து வாழாமல் மனிதர்கள் மேல் நம்முடைய நம்பிக்கையை வைத்து

செயல்படுவதே. நான் உன்னோடு இறுதி வரை உறுதுணையாய் இருப்பேன் என்று வாக்குக்கொடுத்தவர்கள் எங்கோ பாதி வழியில் காணாமல் போய்விடுகின்றனர். ஊழியத்தை இறுதி மூச்சுவரை செய்வேன் என்று ஒப்புக்கொடுத்த அநேகர் பின்னிட்டு போய்விடுகிறார்கள். காரணம் அவர்கள் மனிதர்கள் என்பதே!

“நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள்; எண்ணப் படுவதற்கு அவன் எம்மாத்திரம்” (ஏசா. 2:22) என வாசிக்கிறோம். இஸ்ரவேல் மக்கள் தங்களை இம்மட்டும் நடத்திவந்த தேவனை நிராகரித்து, எங்களை ஆள ஒரு ராஜா வேண்டுமென்று சாமுவேல் தீர்க்கதரிசியிடம் பிடிவாதமாய் கேட்டனர். பின்நாட்களில் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடைய ராஜாக்கள் மீது நம்பிக்கையை வைத்ததினால் வந்த விளைவுகளையும் வேதத்தில் காண்கிறோம். எனவே தான் ஏசாயா **எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம்** என கூறுகிறார்.

வேதாகமத்தில் அநேகர் தேவனைவிட பிறர்மீது அல்லது பிற காரியங்கள் மீது தங்களுடைய நம்பிக்கையை வைத்ததையும், அவர்களின் முடிவுகளையும் அறிந்திருக்கிறோம். குறிப்பாக யோசேப்பு சிறைச்சாலையிலிருக்கையில் தன்னுடன் இருந்த பானபாத்திரக்காரனின் தலைவனிடத்தில் “நீ வாழ்வடைந்திருக்கும்போது, என்னை நினைத்து, என்மேல் தயவுவைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்கவேண்டும்” (ஆதி. 40:14) என்று கேட்டுக்கொண்டான். யோசேப்பு அப்பானபாத்திரகாரனின் தலைவனுக்கு சொப்பனத்தின் அர்த்தத்தை விளக்கி உதவினபோதும் அவன் யோசேப்பை மறந்துவிட்டான் (ஆதி. 40:23). இன்று நாமும் கூட நம்மை இம்மட்டும் உயர்த்திக் கொண்டுவந்த தேவனை மட்டுமே நம்பாமல், மனிதர்களின் தயவுகளை அதிகமாய் தேடுகிறோம். ஆனால் அவர்கள் மறந்துபோவார்கள். நமது தேவனோ நம் நினைவாகவே இருக்கிறார். அவர் ஒருபோதும் நம்மை மறப்பதில்லை. ஆகவே நம்முடைய முழு நம்பிக்கையையும் கிறிஸ்து இயேசுவில் மட்டும் நிலைத் திருக்கச் செய்வோம்.

## *நம்பத்தகாத மனிதனின் பண்பு*

இவ்வுலகில், மனிதரின் பலத்தையோ, குதிரை பலத்தையோ (சங். 20:7) பட்டயம் மற்றும் படைவீரர் ஆற்றலையோ (சங். 44:6), சுயபுத்தியையோ (நீதி. 3:5), ஐசுவரியத்தையோ (நீதி. 11:28), தன் இருதயத்தையோ... நம்புகிறவர்களை மூடன் (நீதி. 28:26) என்று வேதம் சொல்கிறது. இப்படிப்பட்டவர்களுடைய நிலைப்பாடு விழுவார்கள், மோசம் போவார்கள், தூற்றப்படுவார்கள் என்று வேதாகமம் தெளிவாக கூறுகிறது.

## *மனுஷனை நம்பினால் மோசம்!*

மனுஷன்மேல் நம்பிக்கை வைத்து, மாம்ச மானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரைவிட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்றும், அவன் அந்தரவெளியில் கறளையாய்ப்போன செடியைப்போல் (பயனற்ற நிலை) இருந்து, நன்மை வருகிறதைக் காணாமல் (ஆசீர்வாதத்தை உணரவோ, அனுபவிக்கவோ இயலாத சூழ்நிலை), வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும், குடியில்லாத உவர்நிலத்திலும் (பலனற்ற/கனியற்ற வாழ்வு) தங்குவான் (ஏரே. 17:5,6) என்று வேதம் கூறுகிறது. பரிசுத்தத்தைக் காத்துக்கொண்ட யோசேப்பு தனக்கு உதவும்படி மனுஷன்மேல் நம்பிக்கை வைத்தபோது கைவிடப்பட்டதையும், கர்த்தருடைய வேளை வந்தபோது சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டு உயர்த்தப்பட்டதையும் பார்க்கிறோம்.

## நம்பத்தகுந்த தேவனின் அன்பு

ஜெபவீரனான தானியேல் கர்த்தர் மீதான நம்பிக்கையில் ஒருபோதும் தவறியதில்லை (தானி. 6:23). தானியேல் சிங்கக்கெபியில் போடப்பட்டபோது தன் தேவனை முழுவதும் நம்பினதால் ஒரு சேதமும் அவனில் காணப்படவில்லை. ஆகவே நாசியில் சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள் (ஏசா. 2:22). ஜனங்களே எக்காலத்திலும் அவரையே நம்புங்கள். மாறிக்கொண்டிருக்கும் இவ்வுலகில் சூழ்நிலைகளுக்கேற்றவாறு மாறிக்கொண்டேயிருக்கும் மனிதர்களை நம்புவதைப் பார்க்கிலும் எக்காலத்திலும் மாறாத நம்பத்தகுந்த தேவனையே நமது எல்லா சூழ்நிலைகளிலும், எல்லா நேரங் களிலும் நம்பும்படியாக அழைக்கப் படுகிறோம்.

## தேவனை நம்பினால் பாக்கியம்

கர்த்தர் மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீ ரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் (போராட்டங்கள் வரும் ஆனால் தேவன் அதன் மத்தியில் நம்மோடிருப்பார்), இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் (பிரச்சினைகளின் மத்தியில் ஒரு சமாதானம்) வருத்தமின்றித் தப்பாமல் கனிக்கொடுகிறதுமான மரத்தைப் போலிருப்பான் (கனியுள்ள வாழ்வு) என்று எரே. 17:7,8இல் வாசிக்கிறோம். அவரை நம்பியிருக்கிறவர்களுக்கு எப்போதும் சகாயம் கிடைக்கும் (சங். 28:7), பச்சையான ஒலிவமரத்தைப்போல் எப்போதும் செழிப்பாயிருப்பார்கள் (சங். 52:8), கர்த்தரை நம்புகிறவர்கள் உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவார்கள் (நீதி. 29:25), கர்த்தரே அவர்களுக்கு பெலனாயிருப்பார் (ஏசா. 30:15), அவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுபோவதில்லை (ரோ. 9:33) இவை அனைத்தும் கர்த்தரையே சார்ந்து, அவரை மட்டுமே நம்பிக்கையாய் கொண்டவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்கள்.

தேவனுடைய ராஜ்யத்தின் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருக்கிற நமக்கும் சகரியா தீர்க்கதரிசியின் மூலமாய் கர்த்தருடைய வார்த்தை செருபாபேலுக்கு சொல்லப் பட்டதுபோல் “பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, கர்த்தருடைய ஆவியினாலே ஆகும்” என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (சகரியா 4:6). இதில் கூறப்பட்ட பலம் மற்றும் பராக்கிரமம் எதைக்குறிக்கிறதென்றால், பலம் என்பது 1. படைபலம், 2. பண பலம், 3. பண்முகத் திறமையின் பலத்தைக் குறிக்கிறது. பராக்கிரமம் என்பது 1. மனித பலம், 2. மிருக பலம், 3. மகிமையான தேவ தூதர்களின் பலத்தைக் குறிக்கிறது. ஆகவே அவரை நம்புவது என்பது அவரின் வார்த்தையையும், செயல்களையும் அவரின் வேளையையும் நம்புவதேயாகும். நமது குடும்ப வாழ்விலும் மற்றும் ஊழியப்பாதையிலும் நம்மைச் சுற்றி சூழ்நிலைகள் நமக்கு சாதகமற்ற நிலையில் இருக்கும்போது தேவனை மாத்திரம் நம்புவோம். மேற்குறிப்பிட்ட எவர்கள் மேலும், எவைகளின் மேலும் நம்முடைய நம்பிக்கையை வைக்காமல், அலைகளின் மத்தியில் படகில் நிற்கும் இயேசுவை நோக்கி அடிகளை எடுத்து வைத்த பேதுருவைப் போல் நாமும் இயேசு கிறிஸ்துவை மட்டுமே நோக்கிப்பார்த்து வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வின் ஓட்டத்தை ஓடி முடிப்போம்! இவ்வோட்டத்தில் இஸ்ரவேலின் ஜெயபலமானவர் நம்மோடு கூட இருந்து முற்றும்முடிய ஜெயமாய் நடத்துவாராக! கிறிஸ்துவே நமது நம்பிக்கை மற்றும் நங்கூரமாயிருப்பாராக! ஆமென்.

- **மெர்சி செல்வின்,** *(தகவல் தொடர்புத்துறை)*

# E.C.I-இன் தந்தை பேராயர் முனைவர் எஸ்றா சற்குணம் அவர்களை

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு நினைவுக் கூருகிறது



இந்திய சுவிசேஷ திருச்சபையின் (E.C.I.) ஸ்தாபகரும், முன்னோடி ஊழியரும், தந்தை பேராயருமான டாக்டர் எஸ்றா சற்குணம் அவர்களின் ஊழிய வாழ்க்கை திருச்சபைக்கும், சுவிசேஷப் பணிக்கும் மிகுந்த ஆசீர்வாதமாக இருந்ததற்காக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு பெருமைப்படுகிறது.

தந்தை பேராயர் முனைவர் எஸ்றா சற்குணம் அவர்களின் சுவிசேஷப்பணிக்கான தாகமும், கர்த்தரின் ராஜ்யம் விரிவடைவதை காணும் ஆழ்ந்த ஆர்வமும், திருச்சபைக்குள் மட்டுமல்லாமல், நம் தேசத்தில் சுவிசேஷம் எட்டப்படாத பகுதிகளுக்கும் அப்பால், அநேக திருச்சபைகளுக்கும், சுவிசேஷப்பணி தலைவர்களுக்கும் முன்மாதிரியாக உள்ளது.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவுடன் இணைந்து நம் பணித்தள ஊழியங்களுக்கு அவர் அளித்த அசைக்கமுடியாத ஆதரவிற்கு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு நன்றியுள்ளவர்களாக இருக்கிறது. இந்திய சுவிசேஷ திருச்சபை உடனான பங்களிப்பு மற்றும் நட்பை நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு பாராட்டுகிறது.

இந்திய சுவிசேஷ திருச்சபையின் தலைமைத்துவத்திற்காகவும், திருச்சபையின் ஒவ்வொரு விசுவாசிகளுக்காகவும், குடும்பத்திற்காகவும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஜெபிப்பதுடன், அதன் ஒற்றுமையை விரிவுப்படுத்துகிறது. எல்லா மகிமையும் கனமும் கர்த்தருக்கே உண்டாவதாக! ஆமென்.

**அருட்திரு. ஜாண் பெர்லின் S.,** பொது செயலர்.

## சேலம் மாவட்டம்

## ஸ்கேன் குடும்பக் கூடுகை 2024

இடம்: இம்மானுவேல் ஆலய சமுதாயக் கூடம், அஸ்தம்பட்டி, சேலம்

நாள்: 10.11.2024 ஞாயிறு மாலை 5.00 – 8.30 மணி வரை

செய்தி: **Rev. V.T. ஜாண்சன்,** மதுரை

பணித்தள பகிர்வு: **Rev. அகஸ்டஸ் புஷ்பராஜ்**

# நிதிக்காவலரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெபப் பங்காளர்களே,

நம்முடைய கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த ஆண்டு முழுவதும் தேவனின் பாதுகாப்பு மற்றும் வழிகாட்டுதலுக்காக அவருக்கு துதியையும், நன்றியையும் செலுத்துகிறேன். நாம் மேற்கொண்ட ஒவ்வொரு முயற்சியிலும், நாம் எதிர்கொண்ட ஒவ்வொரு சவால்களிலும் அவருடைய தெய்வீகக் கரம் நம்மீது இருந்து, நம்மை ஞானத்தால் வழிநடத்தியது. துன்பங்களில் நம்மை பலப்படுத்தியது, நம்பிக்கை மற்றும் நோக்கத்தால் நம் இதயங்களை நிரப்பியது. 01.04.2024 முதல் 31.03.2029 வரை ஐந்து வருட காலத்திற்கான வெளிநாட்டு பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டம் 2010 (FCRA) இன் கீழ் FMPBக்காக தேவன் ஒரு அற்புதத்தை நடப்பித்துள்ளார்.

தேவனின் பெரிதான கிருபையால் 2023-24 நிதியாண்டிற்கான FMPB கணக்குகள் சரியான நேரத்தில் சரிபார்க்கப்பட்டு தணிக்கை செய்யப்பட்டன. கணக்குகள் 21 செப்டம்பர் 2023 அன்று FMC மூலம் நிர்வாகக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. மற்றும் 22 செப்டம்பர் 2023 அன்று பொதுக்குழு முன் சமர்ப்பிக்கப்பட்டது. அவர்களின் முழு பங்களிப்பு மற்றும் வழிகாட்டுதலுக்காக நமது தணிக்கையாளருக்கும், சரியான நேரத்தில் முடித்த நிதிக் குழுவிற்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

2023-24 நிதியாண்டிற்கான FMPBயின் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் இந்த இதழில் உங்களின் ஆய்வு மற்றும் தகவலுக்காக வெளியிடப்பட்டுள்ளன. அறக்கட்டளைகள் மற்றும் மத நிறுவனங்களுக்கு இணங்க புதிய மற்றும் கூடுதல் சட்ட ரீதியான இணக்கங்களை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த சவால்களை நாங்கள் எதிர்கொள்ள உங்கள் ஊக்கமான ஜெபங்களை நான் நாடுகிறேன். வருமான வரிச் சட்டம் 1961, பண பரிவர்த்தனைகள் மற்றும் வருமான வரிச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படுதல் தொடர்பாக கூடுதல் விதிகள் மற்றும் வரம்புகளை வகுத்துள்ளது. இது ஒரு நபரிடமிருந்து ஒரு நாளில் அல்லது ஒரு பரிவர்த்தனை அல்லது ஒரு நிகழ்வு தொடர்பான ரொக்கமாக 2 இலட்சம் மற்றும் அதற்கு மேல் பரிவர்த்தனை செய்வதை அனுமதிக்க மறுக்கிறது. இத்தகைய கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொண்டு ஆன்லைன் பரிவர்த்தனைகள் / பரிமாற்றங்கள் மூலம் உங்கள் பங்களிப்பு மற்றும் ஆதரவை அனுப்ப நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்களை ஊக்கமளிக்கிறோம். பண பரிவர்த்தனைகளைத் தயவாய் தவிர்க்கவும்.

அன்றாட நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் உழைத்த நிதி குழுவினர் அனைவருக்கும் நன்றி. உங்கள் அர்ப்பணிப்பு மற்றும் சேவைக்காக உங்கள் ஒவ்வொருவருக்கும் நான் நன்றி கூறுகிறேன். அவருடைய நாமத்தில் இன்னும் பெரிய சாதனைகளை நோக்கி நாம் முன்னேறும்போது தேவன் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் மிகுதியாக ஆசீர்வதிப்பாராக!

நன்றியுடனும், ஆசீர்வாதத்துடனும்,

கிறிஸ்துவில் உங்கள் சகோதரன்,



**CA. L. நெல்சன்**
நிதிக்காவலர்

# INDEPENDENT AUDITOR'S REPORT ON FINANCIAL STATEMENTS

To
The Members of
M/S. FRIENDS MISSIONARY PRAYER BAND

**Report on the Financial Statements:**
We have audited the Financial Statements of M/S. FRIENDS MISSIONARY PRAYER BAND, 29, High School Road, Ambattur, Chennai – 600 053 ("the Society"), which comprise of Balance Sheet as at 31st March 2024, the Income & Expenditure account and the Receipts and Payments account for the year ended 31st March 2024 and the notes to the financial statements consisting of summary of significant accounting policies.

In our opinion and to the best of our information and according to the explanations given to us,

> Subject to our "Observations on Financial Systems and Statements" attached to this Report, these Financial Statements of accounts of **M/S. FRIENDS MISSIONARY PRAYER BAND** give a true and fair view of the financial position of the Society as at 31st March 2024 and of its financial performance for the year then ended in accordance with the Accounting Standards issued by the Institute of Chartered Accountants of India (ICAI).

**Basis for Opinion:**
We have conducted our audit in accordance with Standards on Auditing (SAs) issued by the Institute of Chartered Accountants of India. Our responsibilities under those standards are further described in the *Auditor's Responsibilities for the Audit of the Financial Statement* section of our report. We are independent of the "M/s. Friends Missionary Prayer Band, Chennai" in accordance with the Code of Ethics issued by the ICAI, and have fulfilled our other ethical responsibilities in accordance with the Code of Ethics. We believe that the audit evidence we have obtained is sufficient and appropriate to provide a basis for our opinion.

**Responsibilities of Management and those charged with Governance for the Financial Statement:**
Management is responsible for the preparation and fair presentation of these financial statements that give a true and fair view of the state of affairs and results of operations in accordance with the accounting principles generally accepted in India. This responsibility includes the design, implementation and maintenance of internal control relevant to the preparation and presentation of these Financial Statements that give a true and fair view and are free from material misstatement, whether due to fraud or error.

JSAS & ASSOCIATES FRN 014859S CHENNAI-40 CHARTERED ACCOUNTANTS



Old No.: 92/7, New No.:46/7, 3rd Floor, T-Block (T-92) 5th Main Road, Annanagar, Chennai - 600 040.
Tel.: 044-4855 1833, 044-2626 3800, E-mail : office.jsas@gmail.com, Website : www.cajsas.com

Statements represent the underlying transactions and events in a manner that achieves fair presentation.

5. We have communicated with those charged with governance regarding, among other matters, significant audit findings, including any significant deficiencies in internal control that we identified during our audit.

Our responsibility is to express an opinion on these Financial Statements based on our audit. We conducted our audit in accordance with the Standards of Auditing (SA) as prescribed by the Institute of Chartered Accountants of India (ICAI). These Standards require that we comply with ethical requirements and plan and perform the audit to obtain reasonable assurance about whether these financial misstatements.

An audit involves performing procedures to obtain audit evidence about the amounts and disclosures in these Financial Statements. The procedures selected depend on the auditor's judgment, including the assessment of the risks of material misstatement, of these Financial Statements, whether due to fraud or error. In making those risk assessments, the auditor considers the internal control relevant to the entity's preparation and fair presentation of these Financial Statements in order to design audit procedures that are appropriate in the circumstance, but not for the purpose of expressing an opinion on the effectiveness of the entity's internal control. An audit also includes evaluating the appropriateness of the accounting policies used and the reasonableness of the accounting estimates made by the management, as well as evaluating the overall presentation of these financial statements.

We believe that the audit evidence we have obtained is sufficient and appropriate to provide a basis for our audit opinion.

For J S A S & Associates
Chartered Accountants
(FRN. 014859S)

John Ravindran Moses
Partner
(Mem. No. 028566)

Place: Chennai
Date:

JSAS & ASSOCIATES ★ CHARTERED ACCOUNTANTS ★ FRN 014859S CHENNAI-40

**FRIENDS MISSIONARY PRAYER BAND**

29 High School Road, Ambattur, Chennai - 600053

**INCOME AND EXPENDITURE ACCOUNT FOR THE YEAR ENDED 31ST MARCH 2024**

| EXPENDITURE | 2023 - 2024 Amount in Rs. | 2022 - 2023 Amount in Rs. | INCOME | 2023 - 2024 Amount in Rs. | 2022 - 2023 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| **FOREIGN CONTRIBUTION A/C PAYMENTS** | | | **FOREIGN CONTRIBUTION A/C RECEIPTS** | | |
| **Programme Expenses:** | | | By Bank Interest- Savings Bank A/c | **77,865** | 1,68,621 |
| To Calamity Relief Expenses | **-** | 1,12,500 | By Fixed Deposit Interest | **57,50,957** | 33,70,062 |
| To Community Dev Child Care Expenses | **12,99,167** | 7,28,481 | By Donation Calamity Relief | **-** | 5,01,217 |
| To Community Dev Educational Exp. | **12,04,428** | 24,03,686 | By Donation Christmas Gift | **8,000** | 1,27,632 |
| To Community Dev Project Medical Care | **17,78,273** | 5,63,533 | By Donation - Church Construction | **21,94,606** | 35,97,241 |
| To Church Consruction | **7,09,523** | 17,56,396 | By Donation - Community Dev. Camps | **11,76,410** | 29,72,632 |
| **Administration Expenses:** | | | By Donation Community Dev - Child Care | **7,95,603** | 13,14,752 |
| To Bank Charges | **67,892** | 40,438 | By Donation Community Dev - Education | **24,26,428** | 1,22,27,485 |
| To Repairs & Renewals | **10,93,750** | 6,552 | By Donation General | **93,219** | 6,16,063 |
| To Meeting Expenses | **42,190** | 37,500 | By Donation - Building | **2,28,41,659** | 2,43,14,028 |
| To Staff Medical Expenses | **33,70,660** | 29,19,137 | By Donation HR Study Scholarship | **-** | 5,98,150 |
| **DOMESTIC PAYMENTS** | | | By Donation Medical | **37,69,053** | 95,83,630 |
| **Programme Expenses:** | | | By Donation - Monthly Pledge | **26,89,797** | 48,08,002 |
| To Calamity Relief Expenses | **8,73,428** | 20,000 | By Donation Training & Development | **5,93,739** | 10,74,200 |
| To Children Education Expenses | **2,33,64,884** | 1,87,84,542 | **DOMESTIC RECEIPTS** | | |
| To Children Higher Study Scholarship Expenses | **77,22,611** | 70,88,812 | By Bank Interest- Savings Bank A/c | **11,09,894** | 17,62,996 |
| To Church Construction | **5,58,35,367** | 6,44,32,924 | By Fixed Deposit Interest | **1,64,13,773** | 1,79,99,128 |
| To Community Dev Camp Expenses | | | By Donation - Annual Meet | **61,27,849** | 63,04,377 |
| Training & Development | **91,95,688** | 70,29,044 | By Donation - Calamity Releif | **37,93,392** | 2,60,410 |
| Community Dev Camp Exp | **5,50,70,727** | 6,01,57,270 | By Donation - Children Home Maintenance | **27,00,346** | 21,03,221 |
| Linguistic Work | **12,87,702** | 5,84,060 | By Donation - Christmas Gift | **3,85,48,546** | 3,91,85,173 |

JSAS & ASSOCIATES ★ CHARTERED ACCOUNTANTS ★ FRN 014859S CHENNAI-40

**FRIENDS MISSIONARY PRAYER BAND**

29 High School Road, Ambattur, Chennai - 600053

**INCOME AND EXPENDITURE ACCOUNT FOR THE YEAR ENDED 31ST MARCH 2024**

| EXPENDITURE | 2023 - 2024 Amount in Rs. | 2022 - 2023 Amount in Rs. | INCOME | 2023 - 2024 Amount in Rs. | 2022 - 2023 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| To Community Development Expenses | | | By Donation - Church Construction | 6,30,15,068 | 6,02,98,571 |
| Medical Care Expenses | 36,80,851 | 22,59,204 | By Donation Community Dev - Camp | 65,70,994 | 1,34,16,296 |
| Child Care Expenses | 16,89,50,150 | 14,66,89,934 | By Donation Community Dev - Child Care | 16,05,92,330 | 15,51,65,087 |
| Educational Expenses | 6,83,452 | 5,50,642 | By Donation - Community Dev. Education | 54,57,718 | 24,42,243 |
| Vocational Training Expenses | 18,75,000 | 31,57,475 | By Donation - Community Dev. Health Care | 3,89,946 | 3,21,830 |
| Adult Literacy | 67,961 | 5,30,935 | By Donation Field Equipments | 2,15,480 | 11,97,987 |
| To General, Hospitality & Maintenance | | | By Donation - Adult Literacy | 41,750 | 12,000 |
| Mission Field | 70,02,729 | 58,25,797 | By Donation - Linguistic Work | 10,41,300 | 5,61,490 |
| Others | 5,48,987 | 98,340 | By Donation General | 5,15,38,971 | 5,03,16,880 |
| To Medical Expenses | | | By Donation - Building | 71,89,935 | 30,87,257 |
| Mission Field | 83,94,045 | 90,42,476 | By Donation HR Study Scholarship | 15,03,848 | 14,24,671 |
| To Meeting Expenses | | | By Donation Medical | 56,92,173 | 69,16,928 |
| Mission Field | 3,93,674 | 9,68,549 | By Donation - Monthly Pledge | 37,07,49,718 | 36,13,95,994 |
| Annual Meet Expenses | 82,45,163 | 53,97,285 | By Donation - Music & Media | 3,89,891 | 5,56,841 |
| National Missionaries Conference | 1,70,33,224 | - | By Donation National Missionaries Conference | 54,70,495 | - |
| To Postage & Courier | | | By Donation National Navodaya Meetings | - | 12,500 |
| Mission Field | 2,02,359 | 2,20,881 | By Donation Through Field Congregation | 14,51,066 | 44,13,000 |
| Magazine Postage | 35,30,101 | 30,02,237 | By Donation - Training & Development | 48,19,375 | 44,24,314 |
| To Printing & Stationary | | | By Donation - Vehicles | 79,31,880 | 36,56,475 |
| Mission Field | 18,08,710 | 6,07,560 | By Donation Vocational Training | 8,150 | 11,000 |
| Magazine Printing | 1,06,47,679 | 1,39,16,828 | By Miscellaneous Income | 4,39,364 | 4,84,620 |
| To Promotional Material Expenses | 71,77,945 | 83,19,547 | By Sale of Vehicles | 4,24,500 | |

JSAS & ASSOCIATES ★ CHARTERED ACCOUNTANTS ★ FRN 014859S CHENNAI-40

**FRIENDS MISSIONARY PRAYER BAND**

29 High School Road, Ambattur, Chennai - 600053

**INCOME AND EXPENDITURE ACCOUNT FOR THE YEAR ENDED 31ST MARCH 2024**

| EXPENDITURE | 2023 - 2024 Amount in Rs. | 2022 - 2023 Amount in Rs. | INCOME | 2023 - 2024 Amount in Rs. | 2022 - 2023 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| To Rent & Rates | | | By Pension Fund | **10,31,403** | - |
| Mission Field | **96,24,877** | 95,65,378 | By Interest on Income Tax Refund | **-** | 1,26,590 |
| To Repairs & Renewals | | | By Excess of Expenditure Over Income | **1,38,30,927** | 50,61,270 |
| Mission Field | **92,91,816** | 42,20,719 | | | |
| To Salary & Allowances | | | | | |
| Mission Field | **10,31,71,756** | 9,52,74,533 | | | |
| To Staff Higher Study Expenses | **2,76,992** | 1,64,706 | | | |
| To Telephone & Trunk Calls | | | | | |
| Mission Field | **21,90,859** | 22,15,581 | | | |
| To Travelling Expenses | | | | | |
| Mission Field | **1,78,24,587** | 1,82,96,200 | | | |
| To Vehicle Maintenance | | | | | |
| Mission Field | **1,33,56,374** | 1,34,24[illegible] | | | |
| **Administration Expenses:** | | | | | |
| To Audit Fees & Other Expenses | **2,65,500** | 1,35,700 | | | |
| To Bank Charges | **4,07,834** | 2,50,710 | | | |
| To Christmas Gift | **3,72,96,538** | 3,34,44,210 | | | |
| To Contribution To EPF | **2,38,57,621** | 1,92,52,464 | | | |
| To EPF Damages | **1,53,60,108** | 4,93,86,821 | | | |
| To EPF- Interest | **74,11,146** | 73,61,572 | | | |
| To FBF Gifts | **5,32,800** | 8,21,405 | | | |

JSAS & ASSOCIATES ★ FRN 014859S CHENNAI-40 ★ CHARTERED ACCOUNTANTS

**FRIENDS MISSIONARY PRAYER BAND**

29 High School Road, Ambattur, Chennai - 600053

**INCOME AND EXPENDITURE ACCOUNT FOR THE YEAR ENDED 31ST MARCH 2024**

| EXPENDITURE | 2023 - 2024 Amount in Rs. | 2022 - 2023 Amount in Rs. | INCOME | 2023 - 2024 Amount in Rs. | 2022 - 2023 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| To General, Hospitality & Maintenance | **31,68,873** | 90,43,625 | | | |
| To Gratuity | **52,33,295** | 83,84,522 | | | |
| To Legal Fees | **24,173** | 4,28,085 | | | |
| To Medical Expenses | **86,67,644** | 58,01,817 | | | |
| To Meeting Expenses | **31,63,623** | 35,62,881 | | | |
| To Office Maintenance | **36,87,186** | 30,04,321 | | | |
| To Pension Expenses | **1,22,04,413** | 1,15,66,507 | | | |
| To Postage & Courier | **26,61,376** | 25,28,968 | | | |
| To Printing & Stationary | **91,34,836** | 60,13,869 | | | |
| To Rent & Rates | **2,65,88,779** | 2,65,16,182 | | | |
| To Repairs & Renewals | **43,11,736** | 39,80,211 | | | |
| To Salary & Allowances | **4,53,07,096** | 5,45,67, | | | |
| To Staff Welfare | | | | | |
| Holiday Allowance | **21,15,178** | 13,33,785 | | | |
| Warm Cloth Allowance | **28,26,600** | 22,98,985 | | | |
| Staff Welfare - General | **19,89,972** | 36,86,445 | | | |
| To SBF Gift | **1,07,821** | 1,73,940 | | | |
| To Subscription To Other Missions | | 26,500 | | | |
| To Taxes & Insurance | **10,16,742** | 5,81,438 | | | |
| To Taxes & Rates | **6,31,069** | 3,42,547 | | | |

JSAS & ASSOCIATES ★ CHARTERED ACCOUNTANTS ★ FRN 014859S CHENNAI-40

**FRIENDS MISSIONARY PRAYER BAND**

29 High School Road, Ambattur, Chennai - 600053

**INCOME AND EXPENDITURE ACCOUNT FOR THE YEAR ENDED 31ST MARCH 2024**

| EXPENDITURE | 2023 - 2024 Amount in Rs. | 2022 - 2023 Amount in Rs. | INCOME | 2023 - 2024 Amount in Rs. | 2022 - 2023 Amount in Rs. |
|---|---|---|---|---|---|
| To Telephone & Trunk Calls | 11,65,536 | 11,42,328 | | | |
| To Travelling Expenses | 43,04,587 | 41,98,104 | | | |
| To Vehicle Maintenance | 21,87,263 | 19,30,218 | | | |
| To Depreciation - As per annexed Statement | 3,63,82,491 | 3,60,12,120 | | | |
| **TOTAL** | **82,09,07,416** | 80,81,92,863 | **TOTAL** | **82,09,07,416** | 80,81,92,863 |

REFERRED TO IN OUR REPORT OF EVEN DATE
For JSAS & ASSOCIATES
CHARTERED ACCOUNTANTS
FIRM REGN NO : 014859S

Place : Chennai
Date : 21.09.2024

JOHN BERLIN
GENERAL SECRETARY

L.NELSON
TREASURER

JOHN RAVINDRAN MOSES
PARTNER MEM. NO . 028566

UDIN : 24028566BKGRAB1766

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

**DEPRECIATION STATEMENT FOR THE YEAR ENDED 31ST MARCH 2024**

| PARTICULARS | W.D.V. AS ON 31 March-2023 | ADDITIONS 2023 - 2024 | DELETIONS 2023 - 2024 | GROSS BLOCK | RATE OF DEPRECIATION | DEPRECIATION AMOUNT | W.D.V. AS ON 31-MAR-2024 |
|---|---|---|---|---|---|---|---|
| Bicycle | 11,82,192 | 1,43,070 | | 13,25,262 | 10% | 1,27,010 | 11,98,252 |
| Building on Lease Land | 75,982 | - | | 75,982 | 10% | 7,598 | 68,384 |
| Buildings* | 25,86,22,111 | 1,80,63,888 | | 27,66,85,999 | 10% | 2,71,38,264 | 24,95,47,735 |
| Computer | 1,67,797 | 5,34,809 | | 7,02,606 | 60% | 2,96,247 | 4,06,359 |
| Equipment | 2,73,52,382 | 25,31,948 | | 2,98,84,330 | 15% | 43,38,262 | 2,55,46,067 |
| Four/Six Wheelers | 68,19,295 | 64,09,629 | 2,60,000 | 1,29,68,924 | 15% | 14,83,456 | 1,14,85,468 |
| Furniture & Fittings | 17,62,916 | 4,11,750 | | 21,74,666 | 10% | 2,01,884 | 19,72,782 |
| Generator | 32,42,901 | 6,95,700 | | 39,38,601 | 15% | 5,50,463 | 33,88,138 |
| Land* | 12,11,22,289 | | 7,65,753 | 12,03,56,536 | 0% | - | 12,03,56,536 |
| Motor Cycle/Scooter | 1,26,08,465 | 34,19,051 | 1,64,500 | 1,58,63,016 | 15% | 22,39,306 | 1,36,23,710 |
| Construction in Progress | - | 2,39,67,357 | - | 2,39,67,357 | 0% | - | 2,39,67,357 |
| **TOTAL** | **43,29,56,331** | **5,61,77,202** | **11,90,253** | **48,79,43,280** | | **3,63,82,491** | **45,15,60,789** |

** Reclasification of land to building*

**REFERRED TO IN OUR REPORT OF EVEN DATE**
**For JSAS & ASSOCIATES**
**CHARTERED ACCOUNTANTS**
**FIRM REGN NO : 014859S**

**Place : Chennai**
**Date :** 21.09.2024

**JOHN BERLIN**
**GENERAL SECRETARY**

Friends Missionary Prayer Band * 29, High School Road, Ambattur, Ch-53 *

**L.NELSON**
**TREASURER**

JSAS & ASSOCIATES * CHARTERED ACCOUNTANTS FRN 014859S CHENNAI-40

**JOHN RAVINDRAN MOSES**
**PARTNER MEM. NO . 028566**

UDIN: 24028566BKGRAB1766

## FRIENDS MISSIONARY PRAYER BAND

29 High School Road, Ambattur, Chennai - 600053

### BALANCE SHEET AS AT 31 MARCH 2024

| LIABILITIES | SCH | VALUE AS AT 31-MAR-2024 | VALUE AS AT 31-MAR-2023 | ASSETS | SCH | VALUE AS AT 31-MAR-2024 | VALUE AS AT 31-MAR-2023 |
|---|---|---|---|---|---|---|---|
| **CAPITAL FUND** | 1 | **50,97,50,339** | 52,35,81,266 | **FIXED ASSETS** | 6 | **45,15,60,789** | **43,29,56,331** |
| **FUNDS** | | | | **INVESTMENTS** | | | |
| Endowment Funds | 2 | **1,74,65,767** | 1,70,65,767 | Deposits with Banks | 7 | **40,75,48,004** | 42,37,65,893 |
| Staff Benefits Funds | 3 | **23,04,90,642** | 22,71,99,913 | **CURRENT ASSETS** | | | |
| Others Funds | 4 | **15,76,04,947** | 15,75,99,197 | Loans and Advances | 8 | **6,13,36,217** | 7,60,32,778 |
| | | | | TDS Receivable | | **34,38,045** | 17,83,861 |
| **CURRENT LIABILITES** | 5 | **4,22,08,392** | 3,97,25,550 | Security and Caution Deposit | | **5,67,840** | 5,67,840 |
| Earnest Money Deposit | | **85,943** | 85,943 | Cash in Hand | | **2,63,100** | 8,01,870 |
| | | | | Cash at Bank | 9 | **3,28,92,034** | 2,93,49,062 |
| **TOTAL** | | **95,76,06,030** | 96,52,57,636 | **TOTAL** | | **95,76,06,030** | 96,52,57,636 |

**REFERRED TO IN OUR REPORT OF EVEN DATE**
**For JSAS & ASSOCIATES**
**CHARTERED ACCOUNTANTS**
**FIRM REGN NO : 014859S**

**Place : Chennai**
**Date :** 21.09.2024

**JOHN BERLIN**
**GENERAL SECRETARY**

**L.NELSON**
**TREASURER**

**JOHN RAVINDRAN MOSES**
**PARTNER MEM. NO . 028566**

UDIN: 24028566BKGIRAB1766

**நவம்பர் 1 வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கய்தியன்கின் வெய்ஃபெய்
திரு. தாங்லால் ஸௌ
திருமதி. மேரி முர்மு தினேஷ்

# ஜம்மு

## மஜல்டா:

**வசாவே எலேஷ் பிரபு & சுனிதா வெச்யா**

**துதிக்க:** மஹாசா, பகத் இன மக்கள் சுவிசேஷத்திற்கு அதிக வாஞ்சைக்காட்டி வருகின்றனர். தக்தி கிராமத்தில் புதிய தொடர்பாளர்களாக சுனிசந்த், கியான்சந்த் ஆகியோரை தேவன் தந்துள்ளார். 13 ஆண்டுகளாக மனநிலை பாதிக்கப்பட்டிருந்த ராகேஷை ஆலயத்திற்கு அழைத்து வந்துபோது, விசுவாசிகளின் ஒருமனப்பட்ட ஜெபத்தின் மூலம் தேவன் அற்புத சுகத்தைக் கட்டளையிட்டார். கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களிடமிருந்து மிஷனெரிகளை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரவு கூட்டம் நடைபெற்று வரும் கிராமங்களில் ஞாயிறு ஆராதனை நடத்த நிரந்தரமான இடம் கிடைக்க; சமுதாய கட்டுப்பாடுகளினால் விசுவாசத்தை அறிக்கையிட தயங்கும் மன்வல், ராம்கோட் ஆகியோருக்கு தேவன் தைரியத்தின் ஆவியைக் கட்டளையிட; சிறுவர் ஊழியத்தின் மூலம் கிராமத்தில் சுவிசேஷம் அறிவிப்பது எளிதாய் இருப்பதினால் சிறுவர் பள்ளி நடத்த ஏற்ற இடம், சாதனங்கள், அர்ப்பணமுள்ள ஊழியர்களை தேவன் எழுப்பித்தர; வசதியற்ற சூழ்நிலையில் மலைகள் மற்றும் பள்ளத்தாக்குகளில் வசித்து வரும் மஹாசா, பகத் மற்றும் சமார் இன மக்கள் இயேசு கிறிஸ்துவின் அன்பினால் தொடப்படவும், அவர்களின் வாழ்வாதாரம் செழிக்கவும் ஜெபிப்போம்.

## ஆர். எஸ். புரா:

**லுன்ஜாலால் ஹாக்கிப் & மேரி நெங்னெய்கிம்**

**துதிக்க:** அகர்சக் கிராம சபை ஆராதனை மீண்டும் துவங்கப்பட தேவன் கிருபைசெய்தார். விஜய்-பிரியா தம்பதியினர் ஜெபத்தின் மூலம் குழந்தை பாக்கியத்தைப் பெற்றுக்கொண்டனர். 5 கிராமங்களில் சுமார் 750 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குலியன் கிராம சபையில் விசுவாசத்தைவிட்டு பின்வாங்கிப்போன விசுவாசிகள் மீண்டும் கர்த்தரிடம் திரும்ப; புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள பாப்லிதேவி குணமடைய; குலியன், அகர்சக் கிராமங்களில் சிறு ஜெபக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட; கடார்பூர் மற்றும் தாலுகன் கிராம விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர; படலா கிராமத்தில் புதிதாக ஆராதனைக்குழு ஆரம்பிக்க எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

நவம்பர் 2
சனி

# ஹிமாச்சலப் பிரதேசம்

## கர்சோக்:

### பவன் குமார் & பிரபாஷினி தேவி

**துதிக்க:** உபவாச ஜெபத்தின் மூலம் விசுவாசி ரிங்குவிற்கு காவல் நிலையத்தில் உதவியாளராக பணி கிடைக்க தேவன் உதவி செய்தார். குடல் புண்ணினால் சாப்பிட முடியாமல் கஷ்டப்பட்டு வந்த பிரியா தொடர் ஜெபத்தின் மூலம் பரிபூரண சுகம் பெற்றாள். தோல் ஒவ்வாமை நோயிலிருந்து நமது மிஷனெரிக்கு தேவன் தந்த சுகத்திற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புற்றுநோயின் இறுதிக் கட்டத்தில் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் ஸ்ரீநானக் சந்த் அற்புத சுகம்பெற; விசுவாசி சாந்தாராமை இழந்துள்ள அவரது குடும்பத்தினரின் ஆறுதலுக்காக; விபத்தில் இடது கை எலும்புகள் முறிந்துள்ள கோகுல்ராம் விரைவில் பரிபூரண சுகம்பெற; பிசாசின் பிடியிலிருந்து டெசி விடுதலை பெற; கிராமத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள விசுவாசி சுனில் கிறிஸ்துவுக்குள் சாட்சியாய் வாழ; சுகவீனத்தினால் கஷ்டப்படும் விசுவாசி ராம்லாலின் மனைவிக்கு தேவன் சுகமருள ஜெபிப்போம்.

## ரோஹ்ரு:

### ஜாண்சன் சங்கர் & ஜெபராணி

**துதிக்க:** மூன்று பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு தேவனுடைய மந்தையில் இணைந்துள்ளனர். மூன்றாவது மாடியிலிருந்து கீழே விழுந்து தலையில் அடிப்பட்டு பேசும் திறனை இழந்த சுதேச ஊழியர் ஷிர்சிங்கின் மூன்று வயது பேத்தி ரியான்சி ஜெபத்தினாலும், சிகிச்சையினாலும் சுகமடைந்தாள். இருசக்கர வாகன விபத்தில் சிக்கிய சுதேச ஊழியர் விக்கியை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். நமது விசுவாசி சோனியாவுக்கு மருத்துவம் படிக்க இடம் கிடைத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வயிற்றில் அதிகப்படியான சதை வளர்ந்து சிரமப்பட்டு வரும் நாயராம் சுகமடைய; பிசாசின் பிடியிலிருந்து பூணம் விடுதலைபெற; வீட்டில் பதுங்கியிருந்த கருநாகத்திடமிருந்து விசுவாசி ஜீனா காப்பாற்றப்பட்டாள். வரும் நாட்களில் நடைபெறவுள்ள பயிற்சி முகாம்கள் மற்றும் ஜெபக்குழுக்களின் பணித்தள விஜயம் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

## ஆனி: ஜின் சாவ்ம் & சிங் ஹோய்கிம்

**துதிக்க:** இரண்டு பேர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு சபையில் இணைந்தனர். விடுமுறை வேதாகமப் பள்ளியின் 25 சிறுவர்கள் தேவனை அறிந்துகொண்டனர். நட்டார்சிங் இருதய நோயின் தாக்கலிருந்து சுகம்பெற்று வருகிறார். வர்ஷாவை பிசாசின் பிடியிலிருந்து விடுவித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அசுத்தாவியின் தொந்தரவினால் அடிக்கடி சுகவீனப்படும் புதிய விசுவாசி ஹேமா தேவிக்கு தேவன் விடுதலை அருள; மகேஷ் குடும்பத்தில் சமாதானம் நிலவ; நீதர் கிராம சபையில் நடக்க விருக்கும் உபவாச ஜெபக் கூட்டம் எவ்வித தடையுமின்றி நடைபெற; ராஜ்குமார் தீய நண்பர்களின் சகவாசத்தினை விட்டு பெற்றோருக்கு கீழ்ப்படிய ஜெபிப்போம்.

**நவம்பர் 3 ஞாயிறு**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மார்கரெட் ஜோதிமணி ஆசீர்

### ரிகாங்பியோ:
### சங்கர் ஏ. & ரூத் மேரி

**துதிக்க:** மூன்று கிராமங்களில் முதன் முறையாக இயேசு திரைப்படம் திரையிட தேவன் கிருபை செய்தார். சங்காலா கிராம ஆராதனையில் சுனிதா, விமலா, ஜெர்மா, ராஜ்குமார், சாவித்ரி ஆகியோர் புதிதாக கலந்துகொள்கின்றனர். ராஜ்–ரியா தம்பதியினருக்கு ஜெபத்தின் பலனாக தேவன் குழந்தை பாக்கியம் அருளினார். கல்லீரல் பிரச்சனையிலிருந்து சந்தியாவை குணமாக்கின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள நமது விசுவாசி இமான்சிங்கின் தந்தை பீர்மன் ம ற்றும் இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ள பகத்சிங் ஆகியோருக்கு தேவன் அற்புத சுகமருள; ரிகாங்பியோ பணித்தளத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக செயல்படும் மத தீவிரவாத குழுக்களின் முயற்சிகள் முறியடிக்கப்பட; மூல நோயினால் அவதியுறும் குபிராஜ்க்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

### ஜியோரி: ஜம்கோன்காம் ஹயோகிப் & ஜரின் லெட்தென்மாங்

**துதிக்க:** 13 கிராமங்களில் பின்தொடர் பணி செய்யப்பட்டு, புதிய கிராமமொன்றில் 165 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. இரத்த சோகையினால் பாதிக்கப்பட்டிருந்த கியான் தேவிக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். பியான்சா கிராமத்தில் புதிதாக ஒரு குடும்பம் விசுவாசத்திற்குள் வந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மிகுந்த பெலவீனத்தினால் வேலைக்கு செல்ல இயலாமல் கஷ்டப்படும் ராம்காளிக்கு தேவன் பெலனருள; சிறுநீரக பிரச்சனையினால் அவதிப்படும் ராஜ்குமாருக்கு தேவன் பரிபூரண சுகம்தர; விசுவாசத்தில் பின்வாங்கியுள்ள உஷா, பாஹி மீண்டும் விசுவாசத்திற்குள் வர; சுதேச ஊழியர் ஹிரலாலின் நிலப்பிரச்சனையில் தேவன் நியாயம் செய்ய ஜெபிப்போம்.

## பஞ்சாப்

### மான்சா: தெப்ரத்தோ பிஸ்வாஸ் & மன்னா சிங்

**துதிக்க:** முதுகு வலியினிமித்தம் வேலையிழந்த மஞ்சித் சிங் ஊக்கமான ஜெபத்தின் மூலம் பூரண சுகம் பெற்று நல்ல வேலையில் அமர கர்த்தர் கிருபை செய்தார். வீடின்றி தவித்த விசுவாசி சந்தீப் தொடர் ஜெபத்தின் மூலம் சொந்த வீடு வாங்க கர்த்தர் உதவி செய்தார். பிசாசின் பிடியினால் அலைகழிக்கப்பட்ட குருசரண் கௌர் விசுவாசிகளின் ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார். சுதேச ஊழியர் சத்பாலின் மகனுக்கு தேவன் தந்த நல்ல வேலைக்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நிலப் பிரச்சனையினால் தொடரப்பட்டுள்ள நீதிமன்ற வழக்கில் நமது விசுவாசி சுர்ஜித் சிங்கிற்கு தேவன் நீதி செய்ய; பர்ஜித், பிரேம்கலன், உர்தா, ஷிடாவாடே ஆகிய கிராமங்களில் திட்டமிட்டுள்ளபடி நற்செய்தி பெருவிழா சிறப்பாக நடைபெற; வேலை நிமித்தம் அருகாமையிலுள்ள மாநிலங்களுக்கு புலம் பெயர்ந்து செல்லும் விசுவாசிகளின் பாதுகாப்பிற்காகவும், ஆவிக்குரிய வாழ்விற்காகவும் ஜெபிப்போம்.

## நவம்பர் 4 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. முத்தா ரத்னகுமாரி சதீஷ்

### அஹ்மத்கட் மண்டி:

**கிருபா ரக்ஷனா பரே & ஷக்கினா**

**துதிக்க:** சுதேச ஊழியர்களும், சபை மூப்பர்களும், விசுவாசிகளும் இணைந்து தேசத்தின் இரட்சிப்பிற்காக உபவாசத்தோடு ஜெபித்தனர். லால்டாலா, பலேவால், ஆலம்கீர், கிராமங்களில் முதன்முறையாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ஹர்ப்ரீத் பாம்பு கடியிலிருந்தும், நிக்கிதா குடல் நோய்த் தொற்றிலிருந்தும், தீபக் மஞ்சள் காமாலை மற்றும் டைபாய்டு காய்ச்சலிலிருந்தும் ஜெபத்தினால் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை அறிக்கையிட வாஞ்சைக் காட்டுவோரின் பயங்கள் நீங்க; கர்ப்பப்பை கட்டியினால் அவதிப்படும் மன்பிரீத் கௌர் குணமடைய; காச நோயிலிருந்து ரீனாவும், கல்லீரல் தொற்றிலிருந்து தீபக்கும் பூரண சுகம்பெற; விசுவாசிகளுக்கான மேளா சிறப்பாக நடைபெறவும், ஆட்சியாளர்களின் அனுமதி கிடைக்கவும், தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

### ஜைத்தோ:

**சித்தரஞ்சன் தாண்டி & தெஜஸ்விதா**

**துதிக்க:** ஐந்து பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டுள்ளனர். சபை மூப்பர்களுக்கான ஆத்தும ஆதாயப் பயிற்சி சிறப்பாக நடைபெற்றது. ஏழு ஆண்டுகளாக முதுது தண்டுவடப் பிரச்சனையினால் நிமிர்ந்து நடக்கயியலாமலிருந்த மோனிகா தொடர் ஜெபத்தினால் சுகம்பெற்றுள்ளார். பல்வீந்தர்சிங்கிற்கு அரசாங்க வேலை கிடைக்க தேவன் உதவி செய்தார். ஜைத்தோ ஆலயத்தின் சுற்றுச்சுவர் கட்டப்பட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டும் சோஹன்லால், ஜெஸ்பால், ராணி கௌர், ராஜேந்திரா, மணிந்தர்சிங் ஆகியோர் விரைவில் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; தரம்சிங், ஜஸ்பான்சிங், தரம்பீர் ஆகியோர் தங்கள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க; இராஜஸ்தான், ஹரியானா மாநிலங்களுக்கு வேலைக்காக செல்லும் நமது விசுவாசிகளின் பாதுகாப்பிற்காகவும், அவர்களின் ஆவிக்குரிய ஜீவியத்தை காத்துகொள்ளவும் ஜெபிப்போம்.

## ஹரியானா

### ஜீவன் நகர்:

**அலியாக்கீம் ஜெனா & தீபிகா**

**துதிக்க:** 17 கிராமங்களில் பின்தொடர்பணி செய்யப்பட்டதோடு சுமார் 200 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சபை மூப்பர்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சி கலந்துகொண்டோருக்கு பயனுள்ளதாக அமைந்தது. பெண்களுக்கான பயிற்சியில் 34 பேர் கலந்துகொண்டனர். அபுப்சேகர் என்ற இடத்தில் அநேக நாட்களுக்குபின் சத்சங் கூட்டம் நடத்த தேவன் கிருபை செய்தார். பால்மிகி மற்றும் மஹாசாகா மக்களின் மத்தியில் சில குடும்பங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வாஞ்சைக் காட்டி வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகளின் பயிற்சி முகாமில் கலந்துகொண்டோர் விசுவாசத்திலும், ஆவிக்குரிய வாழ்விலும் வளர; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் தேபாவள்ளி கிராமத்தைச் சேர்ந்த கோபால்ராம் இரட்சிக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; இப்பணித்தளத்தில் நடைபெறவிருக்கும் வேதாகம வகுப்புகள், சத்சங் கூட்டங்கள், இயேசு திரைப்பட ஊழியங்கள் அனைத்தும் தடையின்றி ஆசீர்வாதமாக நடைபெற ஜெபிப்போம்.

**நவம்பர் 5 செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

செல்வி. ஜெயஸ்ரீ

## ரத்தியா:

### கார்த்திகேயன் & ஜெயந்தி

**துதிக்க:** இரண்டு பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். விக்ரமை பிசாசின் பிடியிலிருந்தும், வலிப்பு வியாதியிலிருந்தும் தேவன் விடுதலையாக்கினார். எட்டு இடங்களில் திரைப்பட ஊழியம் செய்ய தேவன் கிருபை செய்தார். சீமாராணி மற்றும் ஹர்பிரீத்தை டைபாய்டு மற்றும் தொற்றுநோயிலிருந்து தேவன் சுகமாக்கினார். மஞ்சுராணி பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார். தொலைபேசி மூலம் நடைபெறும் பெண்கள் ஜெபக்குழு கிரமமாக நடைபெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மரித்துபோன அக்கோ, ரமேஷ் ஆகியோரின் குடும்பங்களின் ஆறுதலுக்காக; மார்பகக் கட்டியினால் அவதியுறும் லக்ஷ்மிக்கு தேவன் சுகமருள; மதுபானம் விற்றுவரும் பல்வீர்சிங்க்கு வாழ்வாதாரத்திற்கேற்ற மாற்று வேலை கிடைக்க; சோமாத் மற்றும் ராமா சுவாசப் பிரச்சனையிலிருந்தும், அமர், பப்லி, போபி ஆகியோர் காசநோயிலிருந்தும் சுகம்பெற; சீரா, கிரண், சத்துபால் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்தும், ரேகா, லக்விந்தர் ஆகியோர் அசுத்தாவியின் பிடியிலிருந்தும் விடுதலைபெற ஜெபிப்போம்.

# ராஜஸ்தான்

## கேர்வாடா:

### போயா தேவுபாய் & ஜாமுபேன்

**துதிக்க:** 28 பேர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு சபையில் இணைந்தனர். நீலேஷ் காசநோயிலிருந்தும், ஜீவி பக்கவாதத்திலிருந்தும் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றனர். மதுகம்டா கிராமத்தில் புதிதாக ஆராதனைக்குழு ஆரம்பிக்க தேவன் கிருபைப் பராட்டினார். ஓஸ்லோ, நாராயண்யா, அமர்பூரா ஆகிய புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவித்தபோது அநேகர் வாஞ்சையோடு கேட்டதுமட்டுமின்றி 30க்கும் மேற்பட்டோர் தங்களுக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அனைத்து கிராமங்களிலும் சுவிஷேத்திற்கு காணப்படும் எதிர்ப்புகள் மறையவும், எதிர்ப்பினால் ஆலயத்திற்கு வர தயங்கும் மக்களின் பயங்கள் நீங்கி விடுதலையோடு தேவனை ஆராதிக்கும் சூழ்நிலையை தேவன் உருவாக்கித் தரவும், எதிர்ப்போர் மனந்திரும்பி இரட்சிக்கப்படவும்; கடந்த 8 மாதங்களாக இரத்தப்போக்கினால் அவதிப்படும் ரீனாவுக்கு தேவன் அற்புத சுகம்தர; உடாபேடா கிராமத்தில் திடீரென காது கேளாமல்போன கிருஷ்ணாவுக்கு தேவன் அற்புதம் செய்ய; காச நோயினால் பாதிக்கப்பட்டுள்ள மஞ்சு, தீபிகா, ஹன்ஜா, சமஸ் ஆகியோர் பரிபூரண சுகம்பெற; மதுகம்டா கிராமத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆராதனை வளர்ச்சிப்பெற ஜெபிப்போம்.

நவம்பர்
6
புதன்

உபவாச ஜெபநாள்

**ஹனுமான்கட்: முதவத்து ராஜு நாயக் & புக்கியா ஜான்சிபாய்**

**துதிக்க:** இரண்டு பேர் தேவன்மேலுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். அநேக வருட ஜெபங்களுக்குப்பின் கிரிஷ் குடும்பம் குழந்தை பாக்கியம் பெற்றனர். வாலிபர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் சமாதானமாய் முடிய சபை மூப்பர் ரப்பிசிங்கை தேவன் பயன்படுத்தினார். புது வியாபாரம் துவங்க ரமேஷுக்கு தேவன் கிருபைப் பாராட்டினார். உபவாச ஜெபத்தின் மூலம் சபை மூப்பர் பால்தேவ் வீட்டில் சமாதானமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடல்நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள ஜாக்சர் குணமடைய; மால்கித் சிங், பிரேம் ஜித்சிங் ஆகியோர் போதைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற; அனுராணி மற்றும் லில்லி கௌருக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; மன்பராஸ் கிராம சபை மூப்பர்கள் மற்றும் விசுவாசிகளுக்கு தேவன் ஆத்தும பாரம் அருளி அவர்கள் சுவிசேஷ ஊழியத்தில் வாஞ்சையோடு ஈடுபட ஜெபிப்போம்.

**சாம்ரானியா: மீனுகா அடப்பா மேத்யூ & ராம்புரம் பெடாக்கா ஆஷா**

**துதிக்க:** ஒன்பது பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். லுஹாரியா கிராமத்தில் நடத்தப்பட்ட வாலிபர் கூடுகையில் 28 பேர் கலந்துகொண்டு தேவனுக்கு சாட்சியாய் வாழவும், ஆத்தும ஆதாயப்பணியில் ஈடுபடவும் தங்கள் வாழ்வை அர்ப்பணித்தனர். இரண்டு நாட்கள் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் 65 பேர் கலந்துகொண்டு தேசத்தின் இரட்சிப்புக்காக ஜெபித்தனர். மூன்று கிராமங்களில் தேடுவோர் முகாம் நடத்த கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபை மூப்பர் ராம்சிங் சபை ஊழியங்களில் உண்மையும் உத்தமுமாய் செயல்பட; பாம்புக் கடியினால் தன் மகளை இழந்த காலுபாய்க்கு தேவன் ஆறுதல் அளிக்க; சிறுநீரகக் கல் பிரச்சனையினால் அவதியுறும் பைக்கா பரேலா மற்றும் சுதேச ஊழியர் கைலாஷ் பரிபூரண சுகம்பெற ஜெபிப்போம்.

**ஜூன்ஜூனு: அருள்ராஜ் எபநேசர் & ரோஸ்லின்**

**துதிக்க:** ஷீட்டல் மற்றும் பாக்கியஸ்ரீயின் விசுவாச ஜெபத்தினாலும், சாட்சியினாலும் தேவன் அவர்களது கணவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார். ஆன்லைன் வேதாகம வகுப்பில் ஒன்பது இளம் வாலிபர்கள் தொடர்ந்து வேதத்தை கற்று விசுவாசத்தில் வளர்ந்து வருகின்றனர். ஜெபத்தின் மூலம் ராஜேஷ் கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வைப் பெற்றுள்ளார். சந்தீப், ராகுல், ஓம்பிரகாஷ் மற்றும் ராஜேஷை மதுவின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புற்றுநோயின் 4-வது கட்டத்திலிருக்கும் ஷர்மிளாவின் மகள் லவ்லிக்கு தேவன் இரக்கம்பாராட்ட; விசுவாசத்தில் வளர்ந்து வரும் கோமலுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க; பூஜா மற்றும் வன்ஷிகாவுக்கு தேவன் சுகப் பிரசவமருள; சிறுவர்கள் வாஞ்சையோடு ஞாயிறு பள்ளியில் கலந்துகொண்டு ஆவிக்குரிய வாழ்வில் வளர; விசுவாசத்தில் பின் மாற்றமடைந்துள்ள கமல்சிங், கௌஷிக், அமீத் ஆகியோரின் குடும்பங்கள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர ஜெபிப்போம்.

## நவம்பர் 7 வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பாலசுப்ரமணியன் (ஏ) சைமன் பீட்டர்

### ஆழ்வர் விடுதி: பங்காரு நாயுடு கர்ரி & ஈமண்டி அனுராதா

**துதிக்க:** ஆறு பேர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து திருச்சபையில் இணைந் துள்ளனர். இரவுக்கூட்டங்கள், திரைப்பட ஊழியங்கள், பெண்கள் மற்றும் சிறுவர் முகாம்கள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. துலேடா கிராமத்தில் மனோஜ் சுவிசேஷத் திற்கு வாஞ்சைக்காட்டி வருகிறார். மூன்று நாட்கள் நடைபெற்ற உபவாச ஜெபம் அநேகருக்கு ஆசீர்வாதமாய் அமைந் துள்ளது. ஜெயராம், சரோஜ், சீமா ஆகியோரை அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கந்திகா கிராமத்தில் விசுவாசத்தை விட்டு பின்மாற்றம் அடைந்துள்ள ஆஷா, காஜல், ராதா மற்றும் பூணம் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; விபத்தில் கழுத்து எலும்பு முறிவடைந்துள்ள புல்சந்த் விரைவில் சுகம்பெற; ராஜ்குமாரியின் இரண்டு மகன்களுக்கும் தேவன் நல்ல வேலையைக் கட்டளையிட; தர்ஷன்சிங் மனநிலை பாதிப்பிலிருந்தும், ரமேஷ் புற்றுநோயிலிருந்தும், கலோபாய் காசநோய், பக்கவாதம் & பிசாசு பிடியி லிருந்தும் விடுதலை பெற ஜெபிப்போம்.

## உத்தரகண்ட்

### பாஸ்பூர்: கிறிஸ்டியன் பிரகாஷ் & கோகனி சுமித்ராபேன்

**துதிக்க:** சீத்தாபூர் மற்றும் சாந்திபூர் கிராமங்களில் புதிய ஆராதனைக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கட்டு மானத்தின் போது இரண்டாவது மாடி யிலிருந்து விழுந்த சுந்தர்லாலை தேவன் பாதுகாத்தார். பான்சிகா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றார். கண்பார்வை குறைப்பாட்டினால் துன்புற்று வந்த பிரேம் பாய் ஜெபத்தினால் தெளிவான பார்வையைப் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவாச பிரச்சனையிலிருந்து காசினி பேன் குணமடைய; விசுவாசி பூஜாவுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க; 16 வயதில் போதைக்கு அடிமை யாகி இரண்டு முறை தற்கொலைக்கு முயன்ற ஆஷிஷ் தேவனின் அன்பினால் தொடப்பட, காலாஜார் வியாதியிலிருந்து வினோத் சுகம்பெற ஜெபிப்போம்.

### நானக்மட்டா: ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்

**துதிக்க:** ஆறு பேர் மலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் பிரவேசித்துள்ளனர். குடலிறக்க நோயினால் அவதியுற்ற ஜித்சிங் ஜெபத்தின் மூலம் பூரண சுகம் பெற்றார். சத்வீந்தர் புதிதாக வியாபாரம் ஆரம்பிக்க கர்த்தர் உதவிச் செய்தார். எதிர்ப்புகள் நிறைந்த சுந்தர்நகர் காலனியில் விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாய் உள்ளனர். வயலில் அடித்துகொண்டிருந்த பூச்சி மருந்து ஷிவானியின் வாய்க்குள் சென்ற போதிலும் எவ்வித பாதிப்பின்றி ஜீவனை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உள்ளங்கைகளில் கட்டிகள் ஏற்பட்டு வேலை செய்ய முடியாமலிருக்கும் சுந்தர் சிங்கை தேவன் குணப்படுத்த; திருமணமாகி 7 வருடங்களாக குழந்தை யின்றி தவிக்கும் குர்பிரீத் சிங் & மஞ்ஜித் கௌர் தம்பதியினர் தேவனால் ஆசீர் வதிக்கப்பட; குடல் புற்றுநோயினால் அவதியுறும் ராஜீவ் குணமடைய; பிசாசின் பிடியிலிருந்து 10 வயது சிறுவன் லவ்ஜித் சிங் விடுபட ஜெபிப்போம்.

நவம்பர்

8

வெள்ளி

### திணேஷ்பூர்:

**சிவகுமார் & சுசிலா மராக்**

**துதிக்க:** ஐந்து பேர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்தனர். கீதாவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் குழந்தை பாக்கியம் அருளினார். கண்பார்வை இழந்த ஓம்பிரகாஷ்க்கு அறுவை சிகிச்சை மூலம் தேவன் தெளிவான பார்வையை அருளினார். விசுவாசிகளின் ஜெபத்தின் மூலம் தேஜாஃபௌஜாவுக்கு விரோதமாய் தொடுக்கப்பட்ட பொய்வழக்கில் விடுதலையைக் கட்டளையிட்ட தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரண்டு முறை மாரடைப்பு ஏற்பட்டுள்ள சபை மூப்பர் ராஜ்ராணிக்கு தேவன் பூரண சுகமருள; சுவிசேஷம் கேட்டுள்ள பரம்ஜித் குடும்பம் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க; கூலி வேலைக்காக ராஜஸ்தான் சென்றுள்ள பபுலு மற்றும் அனார்க்களி குடும்பங்களின் பாதுகாப்பிற் காகவும், ஆவிக்குரிய வாழ்வில் நிலைத் திருக்கவும்; கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட தினால் மதுவிற்பனையை விட்டுவிட்ட மக்கான்சிங் குடும்பத்திற்கு தேவன் மாற்று வேலையை அருளிச்செய்ய; பச்சிளம் குழந்தையை இழக்கக்கொடுத்துள்ள காஜல் கௌர் குடும்பத்திற்கு தேவன் ஆறுதலளிக்க ஜெபிப்போம்.

## உத்தரப் பிரதேசம்

### ஜாலவ்ன்: கவித் ராகேஷ் ரத்திலால் & ஈகார் ரேஷ்மா மாருதி

**துதிக்க:** நான்கு பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டனர். முதன்முறையாக 150 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 10 பேருக்கு புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டுள்ளது. மங்ரோல் கிராமத்தில் புதிய ஆராதனைக்குழு ஆரம்பிக்க தேவன் கிருபை செய்தார். ஆவிக்குரிய கூடுகையில் விசுவாசிகள் அநேகர் கலந்துகொண்டு, கூட்டம் ஆசீர்வாதமாக முடிந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜோட்டாலி கிராமத்தில் கடந்த இரண்டு மாதங்களாக சுகவீனத்தினால் பாதிக்கப்பட்டுள்ள ஜோனம் சுகம்பெற; வேதாகம வகுப்புகள் வரும் விடுமுறை நாட்களில் சிறப்பாக நடைபெற; லால் பூரா கிராமத்தில் நற்செய்தி அறிவிக்க காணப்படும் தடைகள் நீங்க; கல்லீரல் வீக்கத்திற்காக பலவித மருத்துவ சிகிச்சைப் பெற்றும் சுகம் கிடைக்காத நிலையில் தற்போது ஆலயத்திற்கு வரும் ஜகாட் என்ற சகோதரிக்கு தேவன் பரிபூரண சுகமருள ஜெபிப்போம்.

## வாழ்வினை மாற்றும் கிறிஸ்துவின் அன்பு

*உத்திரகாண்ட் மாநிலம், பஸ்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த விசுவாசியல்லாத சகோதரி நிதிம் விசுவாசியான ஒருவரை திருமணம் செய்து பனக்கேடா கிராமத்தில் வசித்துவந்தார். கணவரது வீட்டிலுள்ளோர் இயேசு கிறிஸ்துவை ஆராதிப்பது, ஜெபிப்பது, ஆலயத்திற்குச் செல்வது போன்றவற்றை கண்டு அதிர்ச்சியடைந்த நிதிம், தனது பெற்றோரின் ஆலோசனைப்படி தனி அறையில் பூஜை செய்வதும், கணவர் வீட்டார் ஜெபம் செய்யும் போது சத்தமாக பாடல்களை பாடியும் இடையூறு விளைவித்து வந்தாள். இருப்பினும் கணவன் வீட்டார் நிதிபை மிகவும் நேசித்து கிறிஸ்துவின் அன்பினை வெளிப்படுத்தி வந்ததால் ஒரு வருடத்தில் தன்னுடைய பழைய பக்தி வைராக்கியத்தில் தோற்றவளாய், இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதோடு தன்னு டைய பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் கிறிஸ்துவைப்பற்றி கூறி வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.*

நவம்பர்
9
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. செல்லத்துரை J.
திரு. ஜெரால்டு சேவியர்

## சிக்கந்தரா:

### பச்சியாபாய் போஹ்னாபாய் & சவிதாபேன்

**துதிக்க:** மூன்று கிராமங்களில் சத்சங் நிகழ்ச்சிகளின் மூலம் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. சிறுநீரகக்கல் அடைப்பினால் கடுமையாக பாதிக்கப்பட்ட சதீஷ்க்கு அறுவை சிகிச்சை மூலம் தேவன் சுகமருளினார். சிக்கந்தரா ஆலய நிலத்திற்கு பட்டா கிடைக்க தேவன் உதவி செய்தார். காக்ரியா, ஷைனிபூர் மற்றும் ஹரிஹராப்பூர் கிராமங்களில் மீண்டும் ஆராதனைகள் ஆரம்பிக்க தேவன் கிருபை செய்தார். சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டும் ராம்பால், ஜித்தேந்திரா, ஆகாஷ் ஆகியோரின் குடும்பங்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பல்ராமு ஆலய நில பட்டா நமது இயக்கத்தின் பெயரில் மாற்றப்பட; நினோகரா, நாந்து மற்றும் லாட்பூர் கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் உருவாக்க எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; தர்மேந்திரா புற்றுநோயிலிருந்தும், மான்சிங் பக்க வாதத்திலிருந்தும் குணமடைய; வரும் நாட்களில் நடைபெறவிருக்கும் புதிய கிராம ஊழியங்கள், சத்சங் நிகழ்ச்சிகள் சிறப்பாக தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

## பணித்தள ஆய்வு மற்றும் ஆவணத்துறை:

### எல். மாசிலாமணி, ஜே. எட்வர்ட் ஜெபசிங் & ஆக்னஸ்

**துதிக்க:** ஓய்வுப்பெற்ற ஐந்து மிஷனெரி குடும்பத்தினருடன் நேர்காணல் நடத்தப்பட்டு வீடியோ பதிவு செய்யப்பட்டது. ஆந்திராவில் கடும் வெள்ளத்தில் ரயில்கள் ரத்து செய்யப்பட்ட போதும் தேவனுடைய கிருபையால் ஊழியத் திட்டங்கள் தடைபடாதபடி தேவன் உதவி செய்தார். ஜார்கண்ட் மாநிலம் பெல்டிகா பணித்தளத்திலுள்ள கோண்ட்பாடு திருச்சபை, தமிழ் நாட்டிலுள்ள தளி திருச்சபை வரலாற்றை எழுதி முடிக்க தேவன் கிருபை செய்தார். இதற்கு உதவி செய்த சுதேச ஊழியர் பேதுரு முனியப்பா மற்றும் மூத்த மிஷனெரி வி. தாமஸ் அவர்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உத்தரப்பிரதேச மாநிலத்தின் மதுராவில் ஐந்து பேரும், ஹாசியாபாத்தில் நான்கு பேரும் மதமாற்ற தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். எதிர்ப்பாளர்கள் மனந்திரும்பவும், இங்கு பணிசெய்யும் ஊழியர்களை தேவன் அனுதினமும் பாதுகாக்கவும்; தொண்டைப் பிரச்சனையிலிருந்து வி. தாமஸ் அவர்களும் மற்றும் மறதியினால் கஷ்டப்படும் திருமதி ஹெப்சிபால் ரங்கநாதன் அவர்களும் பூரண சுகம்பெற; ஆவணங்களை நிரந்தரமாக பாதுகாக்கும் வழிமுறைகள் மற்றும் தேவைகள் சந்திக்கப்பட; எலேசந்திரம் சபை வரலாறு எழுத ஞானமும், தளி திருச்சபை வரலாற்றை தமிழ் மொழி பெயர்ப்பு செய்யவும் தேவன் உதவி செய்ய; சபை வரலாற்றை தயாரிக்கும்போது தேவையான ஆவணங்கள் தடையின்றி கிடைக்க ஜெபிப்போம்.

## நவம்பர் 10 ஞாயிறு

# மத்தியப் பிரதேசம்

### கர்கோன்:

**பினித் பிரசாத் பர்தன் & அமோஜிதா**

**துதிக்க:** 18 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு சபையில் இணைந்தனர். எதிர்ப்பு நிறைந்த இரண்டு கிராமங்களில் உபவாச ஜெபத்தின் மூலம் நடைபெற்ற இரவுக்கூட்டத்தில் சுமார் 300 பேர் கலந்துகொண்டு நற்செய்தி கேட்டனர். 22 இடங்களில் பின்தொடர்பணியின் மூலம் சுவிசேஷம் அறிவிக்கவும், ஜெபிக்கவும் தேவன் கிருபை செய்தார். மின்சாரம் தாக்கி பாதிக்கப்பட்ட விசுவாசி ஷிவானிக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். ஜ'வாபானி, நாவல்பூர், பாதல்பூரா கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் துவங்கிட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜகநாத்பூர் கிராமத்தில் தடைபட்டிருக்கும் ஆராதனை மீண்டும் துவங்க போலாபாய் மற்றும் ராகேஷ் எடுக்கும் முயற்சிகளை தேவன் வாய்க்கச் செய்ய; மாயாவின் கணவர் குடிப்பழக்கத்திலிருந்து முற்றிலும் விடுபட; குன்குரு கிராமத்தில் புதிய ஆராதனைக் குழு துவங்க எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

### கடூரா:

**பிமல் சந்திர முர்மு & சீத்தாமணி**

**துதிக்க:** மூன்று கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தபோது சுமார் 90 பேர் சுவிசேஷம் கேட்டனர். பிரேமா, சுமன், வினோத் குமார், மஞ்ச் ஆகியோரை பல்வேறு நோய்களிலிருந்து தேவன் குணமாக்கினார். பச்ரோலி ஜெபக்குழுவில் புதிதாக ஒருவர் இணைந்துள்ளார். சபை மக்களின் நான்கு மாத ஜெபத்திற்குபின் ஸ்ரீகான்க்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஷிவ்னி சபையில் விசுவாசிகளுக்காக நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டோர் விசுவாசத்தில் மற்றும் ஆவிக்குரிய முதிர்ச்சியில் வளர; திட்டமிட்டபடி வாலிபர், பெண்கள் மற்றும் சபை மூப்பர்களுக்கான கூட்டங்கள் எவ்வித தடையுமின்றி சிறப்பாக நடைபெற; சரிதா, குரல்பூர், அனிதா பெரி ஆகியோருக்கு சுகப்பிரசவத்தை தேவன் அருள ஜெபிப்போம்.

## தண்டலம் உபவாச ஜெபம்

### சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்கள்

**இடம்:**
COME COMPASSION CENTRE,
1/208, கருணை தெரு, மேட்டு
தண்டலம், திருபோரூர், சென்னை.
**நாள்:** 09.11.2024
சனி – 10.11.2024 ஞாயிறு
**தொடர்பு:** 9789917882

*மத்தியப்பிரதேசம் மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களுக்காக யாவரும் இணைந்து மன்றாடி ஜெபிக்க அணிதிரண்டு வாருங்கள்.*

## நவம்பர் 11 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கந்திகுப்ப இஸ்ரேல்
திருமதி. பிரேம்லதா சுரேஷ் மால்தோ
திருமதி. ஜாய் பெல்லா இவாஞ்சலின் சுனில்
திருமதி. ஏஞ்சல் ராஜ் ஆல்பர்ட்

### மொரேனா:

**ஹோசியல் நாயக் & கீதாஞ்சலி**

**துதிக்க:** 12 பேர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு திருச்சபையில் இணைந்தனர். கிலாப்பூரைச் சேர்ந்த குடி என்பவருக்கு 20 வருடமாக ஆட்கொண்டிருந்த பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் தேவன் விடுதலை அளித்தார். பிசாசின் கட்டுகளினால் பேச இயலாமலிருந்த குடி என்பவரின் மகள் சுனிதாவும் ஜெபத்தினால் விடுதலை பெற்றாள். சேட்டா கிராமத்தைச் சேர்ந்த ராமேத்க்கு இடுப்பிலிருந்த கட்டி புற்றுநோய் என்று சந்தேகிக்கப்பட்ட நிலையில் ஊக்கமான ஜெபத்திற்குப்பின் பூரண சுகம் பெற்றார். நமது புதிய விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தையும், சாட்சியையும் தங்கள் உறவினர்களுக்கு வாஞ்சையோடு அறிவித்து வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சடேகபுரா கிராமத்தைச் சேர்ந்த முனாலாலின் இரட்சிப்பிற்காகவும், அவரது சகோதரி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெறவும்; கோத் கிராமத்தைச் சேர்ந்த கலாஷி அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை பெறவும், அவரது கணவர் இரட்சிக்கப்படவும்; காசநோயினால் அவதியுறும் சிங்கபுரா கிராமத்தைச் சேர்ந்த சுனிதா சுகம்பெற; கவிதா, ஷீமா ஆகியோர் இரட்சிக்கப்பட்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; விசுவாசத்தைவிட்டு பின்வாங்கியுள்ள நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர ஜெபிப்போம்.

## பீஹார்

### சாட்டாபூர்:

**பவார் தினேஷ்பாய் &
பாருட் சீலாபாய்**

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதின் மூலம் சுமார் 250 பேர் இயேசு கிறிஸ்துவை பற்றி அறிந்துகொண்டனர். புலம்பெயர்ந்து சென்ற விசுவாசிகள் பத்திரமாக வீடு திரும்பினர். வறுமையிலிருந்த மணிஷா குமாரியின் கால் எலும்பு அறுவை சிகிச்சைக்குரிய தேவைகளை தேவன் சந்தித்தார். திட்டமிட்டபடி அனைத்து ஊழியங்களும் எவ்வித தடையுமின்றி நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திரிவேணிகஞ்ச் என்ற புதிய கிராமத்தில் தேவன் திரளான தொடர்பாளர்களை தர; ஊழியத்திற்கு அர்ப்பணமுள்ள தன்னார்வ ஊழியர்களை தேவன் எழும்பச் செய்ய; பாப்பு ரிஷிதேவ் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலைபெற; ரஞ்சன் தேவி தைராய்டு பிரச்சனையிலிருந்தும், பைல்சன் ரிஷிதேவ் மூலவியாதியிலிருந்தும் சுகம்பெற; விசுவாசியான ஜோதி தேவியை வெறுக்கும் அவளது மாமியாரின் இருதயத்தில் தேவன் இடைபட; ஐந்து வருடத்திற்கு முன் மஹாராஷ்டிராவிற்கு வேலைக்கு சென்ற அபிஷேக் குமார் விரைவில் வீடு திரும்ப ஜெபிப்போம்.

## நவம்பர் 12 செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சங்கர் P.

# ஜார்க்கண்ட்

### ஜமா: முன்னா மொகந்தியர் & சுமித்தா தாஸ்

**துதிக்க:** ஏழு குடும்பங்கள் புதிதாக ஆலய ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். 23 பேர் மலர்ச்சிப்பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். இரண்டு கிராமங்களில் திருச்சபை ஆண்டு விழா தேவனுக்கு மகிமையாக, ஆசீர்வாதமாக நடைபெற்றது. வீடுகளில் புதிய ஜெபக்குழுக்களை துவங்க தேவன் கிருபை செய்தார். கர்த்தருக்குள் நித்திரையடைந்த நான்கு விசுவாசிகளின் அடக்க ஆராதனை எவ்வித இடையூறுமின்றி நடத்தப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசி கன்காய் மராண்டிக்கு இழந்துபோன பார்வை மீண்டும் கிடைக்க; இப்பணித்தளத்தில் ஊழியம் செய்யும் மூன்று சுதேச ஊழியர்களை தேவன் வல்லமையாய் பயன்படுத்த; வரும் விடுமுறை நாட்களில் நடைபெறவுள்ள வேதாகம பள்ளி சிறப்பாய் நடைபெற; மேலும் கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சிகள், பயிற்சி முகாம்கள், கூட்டங்கள் தடையின்றி குறித்த காலத்தில் நடைபெற ஜெபிப்போம்.

### சோட்டாகக்ரி:

**சுதாகரன் (ஓய்வு) & ஃப்ளாரன்ஸ்**

**துதிக்க:** சுதேச ஊழியர்களுக்கு ஆத்தும ஆதாயப் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. மூன்று நாள் உபவாச ஜெபத்தில் அநேக விசுவாசிகள் பங்குபெற்று தேசத்தின் இரட்சிப்பிற்காக ஜெபித்தனர். போதுமான மழையை தேவன் அருளினார். ஊழியப் பிரயாணங்கள் மற்றும் பயிற்சி முகாம்களில் தேவனுடைய கிருபை இருந்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜெபக்குழுத் தலைவர்களின் பயிற்சி முகாம், வாலிபர் முகாம், சிறுவர் மற்றும் பெண்கள் கூடுகை திட்டமிட்டபடி சிறப்பாக நடைபெற; பிசாசின் பிடியிலிருந்து சுனிதா விடுதலை பெற; பகையா சிறுமியர் விடுதிக்கு பொறுப் பேற்றுள்ள மிஷனெரி குடும்பத்திற்கு தேவன் ஞானமும், கிருபையும் அருள ஜெபிப்போம்.

### கங்குபாடா சிறுமியர் விடுதி:

**ஈவ்லின் பாக்கியா, எஸ்தர் சாவித்ரி**

**துதிக்க:** ஒன்பது விடுதி மாணவிகள் ஜி.என்.எம். நுழைவு தேர்வு எழுத தேவன் உதவி செய்தார். அன்னா மற்றும் சோனாலி காச நோயின் தாக்கத்திலிருந்து சுகம்பெற்று வருகின்றனர். கன மழையிலும் விடுதி கட்டிடத்தையும் மற்றும் மாணவிகளையும் பத்திரமாய் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அடிக்கடி டைபாய்டு காய்ச்சலினால் பாதிக்கப்படும் மரியம் தேவா பூரண சுகம்பெற; குற்றம் செய்து சிறையில் தண்டனை அனுபவித்து வரும் சஞ்சு, பிரேமி, மம்தா, ரூத் முன்சி ஆகியோரின் தகப்பன்மார் மனந்திரும்பி புதுவாழ்வு பெற; விடுதியின் பழைய மாணவிகள் சாட்சியாய் வாழவும், நல்ல வேலை கிடைக்கவும் ஜெபிப்போம்.

நவம்பர் 13 புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. அனில்பாய் கன்விட்

### தீன்பஹாா்:

### நெகேமியா & அனாமிகா பெகு

**துதிக்க:** மாடு முட்டியதால் கை எலும்பு முறிந்த சா்வா முண்டா ஜெபத்தின் மூலம் குணமடைந்தாா். மனைவி மற்றும் பிள்ளைகள் ஆலயம் செல்வதைத் தடுத்து வந்த அட்டுவாாி முண்டா மனந்திரும்பி ஆலயம் வர தேவன் கிருபை செய்தாா். சபைகளை நடத்த புதிதாக ஒன்பது சபை மூப்பா்களை தோ்ந்தெடுக்க தேவன் உதவி செய்தாா். இரவில் வீட்டிற்குள் புகுந்த விஷ பாம்பிடமிருந்து குஷ்புவின் குடும்பத்தை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினால் தன் குடும்பத்தினரால் புறக்கணிக்கப்படும் விமல் கௌாின் வாழ்க்கை ஆசீா்வதிக்கப்படவும், அவாின் குடும்பத்தினா் மனந்திரும்பி இரட்சிக்கப் படவும்; விசுவாசிகளான ராஜேந்திரா முண்டா, ாிங்கி முண்டா, கமாலியா திாிகே ஆகியோாின் குடும்பங்களில் காணப்படும் விரோதம் நீங்கி சமாதானமாய் வாழ; விடுதியில் படிக்கும் நமது விசுவாசிகளின் பிள்ளைகள் படிப்பிலும், ஆவிக்குாிய வாழ்விலும் சிறந்து விளங்க ஜெபிப்போம்.

### மண்ட்ரோ: கென்னடி சிங் & ஹயோஜம் லின்தோய்பி

**துதிக்க:** ஐந்து போ் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனா். பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்த தொிசா ஹன்ஸ்தக், தேரிகா சோரன் ஆகியோா் ஜெபத்தினால் சுகம்பெற்று வருகின்றனா். மகதலேனா மற்றும் மாா்த்தா சோரனை பாம்புக்கடியி லிருந்து தேவன் பாதுகாத்தாா். கயாாிஹா் மற்றும் மணிஹாி கிராமங்களில் புதிதாக ஜெபக் குழுக்கள் துவங்கப்பட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மஹி கிராமத்தில் நடைபெறும் உபவாச ஜெபத்தில் விசுவாசிகள் உற்சாகத்துடன் பங்குபெற; வாலிபா் மற்றும் பெண்கள் முகாம், கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சி ஆகியவை திட்டமிட்டப்படி தடையின்றி நடைபெற; பலாஜாா், மஹி ஆகிய கிராமங்களில் கட்டப்படும் ஆலயங்கள் எவ்வித இடையூறுமின்றி கட்டி முடிக்கப்பட; ராம்பாாி, பாா்டாலா, திவ்யா மற்றும் சிமிரா கிராமங்களில் ஆலயம் கட்ட ஏற்ற நிலத்தை தேவன் அருள ஜெபிப்போம்.

### ராம்காா்: லெட்கோலுன் பெய்ட் & ஹட்நெய்கிம்

**துதிக்க:** 32 போ் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக அறிக்கை யிட்டனா். கின்ட்வாட்குட் கிராம ஆலயக் கட்டுமானப்பணி சிறப்பாக நடந்து முடிந்தது. ராணி சோரன் பாம்பு கடியிலிருந்தும், சிவ்லால் சிறுநீரக பிரச்சனையிலிருந்தும் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றனா். ஞாயிறு பள்ளி ஆசிாியா்கள் பயிற்சி முகாம், ஆத்தும ஆதாயப் பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ாியால்டி, ஆஷ்னா, மல்மா மற்றும் கருடி கிராமங்களில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க; ராம்சோக் முா்மு பக்கவாதத்திலிருந்தும், ஜத்ரு டுடு மந்திர கட்டுகளிலிருந்தும், சுரேந்தா் அசுத்தாவியின் தாக்குதலிலிருந்தும் விடுதலை பெற; சோனாலி மராண்டிக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள ஜெபிப்போம்.

## நவம்பர் 14 வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ரஞ்சித் ஜேம்ஸ், திரு. ஜாண் C.H.
திருமதி. ஜெலின் சங்கர்
செல்வி. மகேஷ்வரி ரெபேக்கா
திரு. வால்வி தீனா தானா

### சாந்தோபானி:

**ஜேக்கப் ஞானப்பண்டிதன் & சாந்தி**

**துதிக்க:** 31 கிராமங்களில் 129 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்று இடங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்பட்டுள்ளது. பாக்ஜ்னோபா கிராமத்தைச் சேர்ந்த பூலோ தேவி மற்றும் ஜரியாபானி கிராமத்தைச் சேர்ந்த சிமா தேவி தொடர்ந்து ஆலய ஆராதனையில் கலந்துகொள்வதோடு தேவனை விசுவாசித்தும் வருகின்றனர். ஜரியாபானி கிராமத் தலைவர் லக்ஷ்மண் ராய் நற்செய்திக்கு ஆர்வம் காட்டி வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிமா தேவி, பூலோ தேவி, கலாவதியா தேவி, லக்ஷ்மண் ராய், சங்கர் ராய் ஆகியோரின் குடும்பங்கள் கிறிஸ்துவின் விசுவாசத்தில் வளர; புகையிலை பழக்கத்தினால் விசுவாசத்தை விட்டு பின்வாங்கிபோயுள்ள பிரேம் குமார் அப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்று மனந்திரும்ப; இயேசு திரைப்படம் பார்த்தவர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க ஜெபிப்போம்.

### அமரபாடா:

**வியாசு பாபு & சௌந்தர்ய ரேகா**

**துதிக்க:** 23 கிராமங்களில் சுமார் 3775 பேருக்கு சுவிஷேம் அறிவிக்கவும், 18 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்று அறிக்கையிடவும் தேவன் கிருபை செய்தார். 12 வேதாகமங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. சல்பத்ரா கிராமத்தில் விசுவாசிகளை துன்புறுத்தி வந்த பினஜ் மராண்டி மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தும்பார்சிர் ஆலயக் கட்டு மானப்பணி விரைவில் துவங்கப்பட; புதிய தொடர்பாளரான சந்தோஷ் ஹெம்ரோம் மற்றும் பிர்சுனாத் டுடு குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள ருசிலால் ஹெம்ரோம், சுசிலா ஹன்ஸ்தா, ஜெய் முர்மு, மிரு ஹெம்ரோம், ஜுனாஸ் ஹெம்ரோம் ஆகியோர் பரிபூரண சுகம்பெற; குஷ்குட்டா, போல்மா, தும்பார்ஹிட்டா, மலிகின்டா மற்றும் ஜோஜோ டோலா கிராமங்களில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; கள்ள உபதேசங்களுக்கு நமது விசுவாசிகளை தேவன் விலக்கி பாதுகாத்துகொள்ள ஜெபிப்போம்.

---

**மேற்கு மும்பை**

**ஸ்கேன் குடும்பக் கூடுகை 2024**

இடம்: CNI பெத்தானியா தமிழ் சர்ச், மீரா ரோடு, மும்பை மேற்கு
நாள்: 10.11.2024 ஞாயிறு
மாலை 4.30 மணிக்கு
செய்தி: **Rev. G. கிங்ஸ்லி** (செயலர், தமிழ்நாடு தெற்கு மண்டலம்)
தொடர்பு:
9930482433

---




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஆலிஸ் பிசோயி

திருமதி. வசாவா சவிதாபேன் பச்சியாபாய்

## கதுவா & சந்தால் தலைமைத்துவப் பயிற்சி மையம்:

### சுந்தர் துரை & மெல்பின் ரெஜினி

**துதிக்க:** போன்டோலா ஆலயக் கட்டுமானப் பணிகள் நல்லமுறையில் முடிக்கப்பட்டுள்ளது. குஸ்மா ஆலயத்தின் கான்கிரீட் பணிகள் நிறைவடைந்துள்ளன. சமைதோப் கிராமத்தைச் சேர்ந்த 23 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். 8 அடி நீளம் கொண்ட பாம்பிடமிருந்து ஊழியரின் குடும்பத்தை தேவன் பாதுகாத்தார். பிராந்திய அளவில் நடைபெற்ற மூன்று நாள் உபவாச ஜெபத்தில் சுமார் 600 பேர் கலந்துகொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சோட்டாகாக்ரி மற்றும் சுச்சி கிராமங்களில் ஆவிக்குரிய எழுப்புதலுக்காகவும், அநேக ஆத்துமாக்கள் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தப்படவும், ஊழியத்திற்கு தடையாயிருக்கும் மந்திரவாதிகள் மனந்திரும்பி இரட்சிக்கப்படவும்; வாலிபர் மற்றும் சிறுவர் முகாமில் கலந்துகொண்டோர் கிறிஸ்துவுக்கு சாட்சியாய் வாழ; ஜெபக்குழு தலைவர்கள் கூடுகையில் கலந்து கொண்டோர் தங்கள் ஜெபக்குழு அங்கத்தினர்களை விசுவாசத்திற்குள் வழிநடத்த ஜெபிப்போம்.

## ரானேஷ்வர்:

### சய்கோதங் ஸௌ, உப்தேஷ் குமார்

**துதிக்க:** 27 புதிய கிராமங்களில் சுமார் 850 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. நான்கு பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். அர்சு மராண்டி மற்றும் எபெர்டி சோரன் நெஞ்சு வலியிலிருந்தும், பத்ரஸ் முர்முவின் மகன் அருண் சுவாச கோளாறிலிருந்தும், காபிரியல் டைபாய்டிலிருந்தும், கரிஷ்மா வயிறு வீக்கத்திலிருந்தும், பரமேஸ்வர் கண் பிரச்சனையிலிருந்தும் ஜெபத்தினால் சுகம் பெற்றார்கள். வேலையினிமித்தம் கேரளாவிற்குச் சென்று காணாமல்போன டிகுசோரன் ஜெபத்தினால் ஒருமாதத்திற்குப்பின் வீடுவந்து சேர கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மலோஜிபஜார் டைபாய்டு காய்ச்சலிலிருந்து விரைவில் சுகம்பெற; ஊழியரை கிராமத்திற்குள் வராதபடி தடைசெய்யும் பட்கிடி கிராமத் தலைவர் மஞ்சிக் மனந்திரும்ப; கிறிஸ்தவத்தை கடுமையாக எதிர்த்து, விசுவாசிகளை வழிவிலகச் செய்யும் ரேணுகா குமாரியோடு தேவன் இடைபட; இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த கோபால் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அற்புத சுகத்தைப் பெற்றுக்கொள்ள; பெற்றோரை இழந்துள்ள, தங்கள் பேரப்பிள்ளைகளை கவனிக்க சிரமப்படும் மராங்கோவின் வாழ்வாதார தேவைகள் சந்திக்கப்பட; சங்கீதா ஹன்ஸ்தக், பசந்தி சோரன், சரிதா சோரன் ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள ஜெபிப்போம்.

நவம்பர்
16
சனி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. ஆபிரகாம் தாமஸ்

## ராஜ்மஹால் சமுதாய கல்லூரி:
### ஸ்டாலின் ஜீவா & செல்வராணி

**துதிக்க:** நமது ஊழியர்கள் மற்றும் மாணவர்களை மழைக்கால வியாதிகளுக்கும், ஆபத்துகளுக்கும் விலக்கி தேவன் பாதுகாத்தார். 12-ம் வகுப்பு தேர்வு எழுத ஆறு மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். ஒவ்வொரு மாதமும் கல்லூரியின் தேவைகளை தேவன் சந்தித்து வருகிறார். முழு இரவு ஜெபங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விடுமுறை வேதாகமப் பள்ளி ஆசிரியர் பயிற்சியில் கலந்துகொண்டோரை தேவன் வல்லமையாய் பயன்படுத்த; தையல் வகுப்பில் கலந்துகொள்வோர் உற்சாகத்தோடு கற்றுக்கொள்ள; வெவ்வேறு இடங்களில் பணி செய்யும் பழைய மாணவர்கள் தேவனுக்கு சாட்சியாய் வாழ; மாணவர்களுக்காக கட்டப்படும் அறை மற்றும் சிற்றாலயத்தின் கட்டுமானப்பணிகளின் தேவைகளை தேவன் சந்திக்க ஜெபிப்போம்.

## பலாமு:
### பர்னபாஸ் & பியூலா ஜெபகுமாரி

**துதிக்க:** ஆசம்தேகா கிராமத்தைச் சேர்ந்த விசுவாசி கீதா தன் சிறு குழந்தையுடன் நதியைக்கடக்கும் போது வெள்ளத்தில் மூழ்காதபடி தேவன் பாதுகாத்தார். அடர்ந்த வனப்பகுதியில் வசித்து வரும் சகுந்தலா தேவிக்கு நள்ளிரவில் பிரசவ வலி ஏற்பட்டபோது விசுவாசிகள் கூடி ஜெபித்ததின் விளைவாக தேவன் சுகப்பிரசவத்தைக் கட்டளையிட்டார். விவசாயத்திற்கு ஏற்ற மழையை தேவன் கட்டளையிட்டுள்ளார். துபெல்கஞ்ச் கிராமத்தில் புதிதாக ஞாயிறு ஆராதனை துவங்கப்பட்டுள்ளது. மாமனாரின் தீவிர எதிர்ப்பின் மத்தியிலும் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்கும் சந்திரவதியின் குடும்பத்தினருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காட்டில் விறகு வெட்டும்போது காயமடைந்த லூரிதேவிக்கு தேவன் சுகமருள; மழைக் காலங்களில் நதியைக் கடக்க கஷ்டபடும் ஆசம்தேகா மற்றும் பார்வாபாட் கிராம மக்களின் பாதுகாப்பிற்காகவும், அரசாங்கத்தின் மூலம் விரைவில் பாலம் அமைத்துத்தரவும்; மருத்துவம் படிக்கவும், இராணுவத்தில் சேரவும் ஆர்வம் காட்டி வரும் விசுவாசிகளின் பிள்ளைகளான சந்திரன், சுகில், சுசிலா ஆகியோரின் மனவிருப்பத்தை தேவன் வாய்க்கபண்ண; இப்பகுதியில் காணப்படும் குழந்தை திருமணம் சட்டப்படி தடைசெய்யப்பட ஜெபிப்போம்.

## உயிர் தரும் உத்தமர் இயேசு

*ஜார்கண்ட் மாநிலத்தின் பக்குவாஹட் பணித்தளத்திலுள்ள நீம்துங்கா கிராமத்தைச் சேர்ந்த மதி மராண்டி வேலைக்காக புலம் பெயர்ந்து சென்றவர். அங்கு அவருக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டு படுத்தபடுக்கையானார். அவர் மரித்துவிடுவார் என எண்ணி சொந்த கிராமத்திற்கு கொண்டு வந்து அவரது வீட்டில் விட்டுச் சென்றனர். நீம்துங்கா சபை விசுவாசிகள் மதிமராண்டியைச் சந்தித்து அவருக்காக ஊக்கமாய் ஜெபித்தனர். மூன்று நாட்களில் பரிபூரண சுகம் பெற்று எழுந்து அமர்ந்தார். தற்போது மற்றவர்களைப்போல் அவரும் வேலை செய்து வருகிறார். தேவ நாமம் கிராமத்தில் மகிமைப்பட்டது. அலேலூயா!*

நவம்பர்
17
ஞாயிறு

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஹேமலதா ஆபிரகாம்

### தவகொட்டா சிறுவர் மேம்பாட்டு மையம் & விடுதி:

**ஜாண்சன் ராஜதுரை & வினோதினி**

**துதிக்க:** மால்டோ வாலிபர்களுக்கு விவசாயம், கால்நடை வளர்ப்பு, மரம் நடுதல் போன்றவற்றில் புது வழிமுறைகளை கற்றுக்கொடுக்கவும், 6000 மரக்கன்றுகள் விநியோகிக்கவும் தேவன் உதவி செய்தார். பாரம்பி, டம்ருபிட்டா, பட்டுவாடே, சோட்டாஜாரா ஆகிய கிராமங்களில் பிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வி கற்றுக்கொடுக்கப்பட்டு வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஞாயிறு பள்ளி பாட புத்தகங்கள், 1, 2, 3-ம் வகுப்பு மாணவர்களுக்கு மால்டோ மொழி பாட புத்தகம், வாலிபர்களுக்கான கையேடு மற்றும் ஜார்கண்ட் மாநிலத்திற்கான ஜெபக் கையேடு தயாரிக்கும் பணி விரைவில் முடிவடைய; முதியோர் கல்வி திட்டத்தின் மூலம் அநேகர் எழுத்தறிவு பெற்றுக்கொள்ள; குடிப் பழக்கத் திற்கு அடிமைப்பட்டவர்களுக்கான விழிப்புணர்வு முகாம், விவசாய பயிற்சி, பல்வினை பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி சிறப்பாக நடைபெற; சுமார் 1200 சபை மூப்பர்களுக்கு தங்கள் கிராமத்தி லேயே வாழ்வாதாரத்திற்கான வழியை தேவன் ஏற்படுத்தித்தர ஜெபிப்போம்.

## மேற்கு வங்காளம்

### பாக்குவாஹாட்:

**ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி**

**துதிக்க:** 10 பேர் கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வு பெற்று சபையில் இணைந்துள்ளனர். நீம்தங்கா சபையில் மூன்றுநாள் உபவாச ஜெபம் நடத்தப்பட்டது. சில்டானி, மணிக்பூர் மற்றும் தொலிகட்டு கிராமங்களில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் காணப்படுகிறது. வேலைக்காக புலம் பெயர்ந்து வேறு மாநிலத்திற்குச் சென்ற சஞ்ஜித் ஹன்ஸ்தா, மதி மராண்டி ஆகியோர் அதிக சுகவீனமடைந்து சொந்த கிராமத்திற்கு தூக்கி வரப்பட்ட நிலையில், விசுவாசிகளின் ஜெபத்தைக் கேட்டு பரிபூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சல்போனா, மணிக்பூர் கிராமங்களில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க; இரவு கூட்டம் நடத்தி வரும் சில்டானி, உலாத்தூர் ஆகிய கிராமங்களில் தற்காலிக ஆலயம் கட்ட நிலம் கிடைக்க; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் மல்டோபாரா, படுவாடுங்கா, கப்ராடகி மற்றும் தலிக்கட்டு கிராமங்களில் விரைவில் இரவுக் கூட்டங்கள் ஆரம்பிக்கப்பட; சோயிலன், சுஜன் ஆகியோர் குடும்பங்களிடையே உள்ள பகைமை நீங்கி சமாதானம் நிலவ; சுவிசேஷ ஊழியத்தில் விசுவாசிகளும், வாலிபர்களும் உற்சாகமாய் பங்குபெற ஜெபிப்போம்.

## நவம்பர் 18 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜாக்குலீன் பெஞ்சமின்
திரு. திசாங்சே சங்தம்

### சம்சி: தீப் ரத்னா & மித்லேஷ்

**துதிக்க:** மூன்று கிராமங்களில் சுமார் 1000 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப் பட்டுள்ளது. பார்கி மராண்டி மற்றும் கிரியல் பச்சிம் தங்கள் வியாதி யிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றனர். லாவாகிராம் பகுதியில் நடைபெறும் ஆராதனையில் 4 புதிய குடும்பங்கள் கலந்துகொள்கின்றனர். சந்துபூர், துக்கரியா, ரோனா, புரோல், ஜித்தாலால் ஆகிய கிராமங்களில் எவ்வித தடையுமின்றி வீடுகள்தோறும் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். ஜித்தல்பூர் கிராம சிப்நாராயணின் மகளை அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுவித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மழையின் காரணத்தால் பழைய தற்காலிக ஆலயம் இடிந்த நிலையில் வார்லி கிராமத்தில் புதிய ஆலயம் விரைவில் கட்டப்பட; பிசன்பூர் மற்றும் குஷ்டங்கி கிராமத் தலைவர்களின் பயமுறுத்துதலினால் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட தயங்கும் இரண்டு விசுவாச குடும்பங்களின் பாதுகாப்பிற்காக; கள்ள உபதேசத்திற்கு செவிசாய்த்து விசுவாசத்தைவிட்டு பின்வாங்கிபோன பக்டி மராண்டி, பப்லு ஹெம்ரோம் ஆகியோர் மெய் சத்தியத்தை அறிந்துகொள்ள; தங்கள் குடும்பத்தினரால் எதிர்ப்பை சந்தித்து வரும் புர்க்கு மராண்டி, லுக்கிராம் கிஸ்கு, படல்பாஸ்கே, ரூபி ஹன்ஸ்தா ஆகியோர் விசுவாசத்தில் உறுதியாயிருக்க; எதிர்ப்பு களின் மத்தியிலும் தைரியத்துடன் ஊழியம் செய்ய நமது ஊழியர்களுக்கு தேவன் உதவி செய்ய ஜெபிப்போம்.

### தபான்:
### ஹரமோகன் பிரபுதாஸ் நாயக் & சூசம்மா

**துதிக்க:** நான்கு இடங்களில் நடை பெற்ற வெளிப்புற சுவிசேஷ ஊழியத் தின்மூலம் சுமார் 800 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. திடீரென மரணத்தை தழுவிய 18 வயது தெபோசி சோரன் விசுவாசிகளின் ஊக்கமான ஜெபத்தினால் உயிருடன் எழும்ப தேவன் கிருபை செய்தார். பகன்பாடி, புரோப் பகன், டோஹோபாடா, ராம்தேவ்பூர், ஹேக்கொண்டார், அம்டாபூர், பஞ்சத் மற்றும் ஹஸ்நகர் கிராமத்தினர் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டுகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருக்கும் ரஜென் ஹஸ்தா, பபுலு சோரன், கடனா சோரன், ராபின் சோரன், கோபேஸ் கிஸ்கு, சுரேஷ் பாஸ்கி ஆகியோர் தடையின்றி கிறிஸ்துவை அறிக்கையிட; வாலிபர் முகாமில் கலந்துகொண்டோர் எடுத்த தீர்மானங் களில் நிலைத்திருக்க; கல்லீரல் பிரச்சனையிலிருந்து சோனாடி டுடு, மஞ்சள்காமாலையிலிருந்து பாரதி மராண்டி, கர்ப்பப்பை பிரச்சனை யிலிருந்து ரேணுகா டுடு, மார்பக கட்டியிலிருந்து சாவித்ரி ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

**நவம்பர்**

**19**

**செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. எலிசபெத் சொர்ணா துரைராஜ்

திருமதி. பசந்தி பாசுதேவ் மால்தோ

### ராணிகஞ்ச்:

**துருபராஜ் பெபர்த்தா & புஷ்பாஞ்சலி**

**துதிக்க:** 25 கிராமங்களில் இரவுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு சுமார் 1150 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. ஆறு பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு விசுவாசத்தை அறிக்கை செய்தனர். இரண்டு இடங்களில் எவ்வித எதிர்ப்புமின்றி திரைப்பட ஊழியம் நடத்தப்பட்டது. முலிகா மார்டியை அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுதலையாக்கினார். ஜோதின் மனைவிக்கு தேவன் சுகப்பிரசவம் அருளினார். ரோல்கட்டு, சோன்டன்டிகி, மோலானிபூர், கண்டூர், மோராபாரா, டதியால் ஆகிய புதிய கிராமங்களில் விசுவாசிகளுக்கான கூடுகை சிறப்பாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுதேச ஊழியர்களின் குடும்பத்தினருக்கு தேவன் நல்ல ஆரோக்கியத்தை அருள; விசுவாசிகள் ஆத்தும ஆதாயப்பணியில் உற்சாகத் துடன் ஈடுபட; புஜுபித்தா பகுதிகளில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போர் தைரியத்துடன் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; சபை மூப்பர் மற்றும் விசுவாசிகளுக்கான பயிற்சியில் கலந்துகொண்டோர் ஆவிக்குரிய வாழ்வில் இன்னும் அதிகமாய் வளர ஜெபிப்போம்.

## அஸோம்

### கோஹ்பூர்:

**நாத்தான் குமார் பெபர்த்தா & நிருபோமா**

**துதிக்க:** ஆறு பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். தொலைந்து போன பசுமாடு ஆறு நாட்களாகியும் கிடைக்காததால் ஊராரின் கேலிக்கு ஆளான விசுவாசி குஞ்ஜோ பட்ஹரி, தேவனை நோக்கி முறையிட பசுமாடு தானாகவே வீடு திரும்பியது. சோக்டா மற்றும் அரிமோரா கிராமங்களில் விசுவாசிகளின் முகாம் நடத்தவும், ஐந்து இடங்களில் இயேசு திரைப்படம் திரையிடவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டோக்கு சப்பாரி, பிசோலா, சிராகுவா, போர்ஹடி, காசிகேமாடா போன்ற கிராமங்களில் முதன்முறையாக சுவிசேஷம் அறிவிக்க எடுக்கப்படும் முயற்சிகள் நல்ல பலனைத் தர; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் போபன் பட்ஹரி, ஆகாஷ் பட்ஹரி, குலாப் பட்ஹரி, லுமுக் பட்ஹரி, ஜிபட்ஹர், கிட்டேஸ்வர் ஆகியோர் விரைவில் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

நவம்பர் 20 புதன்

உபவாச ஜெபநாள்

# சத்தீஸ்கார்

## பாலோடா பஜார்: ரமேஷ்வர் தயாள் நிர்மல் & மதுகலா

**துதிக்க:** சந்கோராபாடா, தாராசிவ் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க, மூன்று கிராமங்களில் இயேசு திரைப்படம் திரையிட தேவன் கிருபை செய்தார். லக்மண்விகாரில் சுதேச ஊழியர்களுக்கு ஆத்தும ஆதாயப் பயிற்சி அளிக்கப்பட்டது. பத்ரஸ் மஸி மற்றும் மஞ்சு லதா ஊழியர்களாக இணைய கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சம்ஹார்டி கிராமத்தில் ஊழியத்திற்கு அதிக எதிர்ப்பு தெரிவித்து வரும் சோஹட்டா மனந்திரும்பி இரட்சிக்கப்பட; வேலையின்றி கஷ்டப்படும் ராமேஷ்வர் சாகுவிற்கு விரைவில் வேலை கிடைக்க; கம்கரியா கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க; வேலை நிமித்தம் புலம் பெயர்ந்து சென்றுள்ள நமது விசுவாசிகள் சாட்சியாய் வாழ ஜெபிப்போம்.

## பத்தல்காவ்: பத்வி சோமாலியா & மஹாலா ஷீலாபேன்

**துதிக்க:** சல்னிடெரா கிராமத்தில் சபை மூப்பர் பயிற்சியும், அமாபள்ளி மற்றும் மத்வடல் சபை விசுவாசிகளின் ஆவிக்குரிய கூடுகையும் ஆசீர்வாதமாக நடைபெற்றது. 10 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்தனர். இப்பணித்தளத்தின் மூன்று இடங்களில் நடைபெறும் ஆலயக் கட்டுமானப்பணிகள் தடையின்றி நடைபெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடைபெறவிருக்கும் விசுவாசத்தை அறிக்கையிடும் நிகழ்ச்சி, பெண்கள் மற்றும் வாலிபர் முகாம், வெளிப்புற சுவிசேஷ ஊழியங்கள் மற்றும் ஆலயப் பிரதிஷ்டை தேவ நாம மகிமைக்காக தடையின்றி நடைபெற; சத்ராம், சோஹன், கும்ஹர் குவார் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்தும், மஹாச்சோ மற்றும் பிரபுதாஸ் புகைப்பழக்கத்திலிருந்தும் விடுபட; சகல்சாய் ரட்டியா பக்கவாதத்திலிருந்து சுகம்பெற; வாலிபர் முகாமில் பங்குபெறுவோர் தேவனுக்கு தங்கள் வாழ்வை அர்ப்பணித்து சாட்சியாய் வாழ; சபை மூப்பர்கள் மற்றும் சுதேச ஊழியர்கள் தேவனுடைய பணியில் உண்மை, உத்தமமுமாய் ஈடுபட ஜெபிப்போம்.

## பையாதன்: தாங் சின் லியான் & உங் தியான்சிங்

**துதிக்க:** விடுதிப் பிள்ளைகள் படிப்பிலும், ஆவிக்குரிய வாழ்விலும் வளர்ந்து வருகின்றனர். ஆலயத்தைப் புதுப்பிக்கும் பணி 80% முடிவடைந்துள்ளது. விசாகப்பட்டினத்தில் மண்டல அளவிலான ஆவிக்குரிய மாநாடு ஆசீர்வாதமாய் நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மழைக் காலத்தில் பரவும் தொற்றுநோய்களிலிருந்து விடுதிப் பிள்ளைகளை தேவன் பாதுகாக்க; படிப்பில் பின்தங்கியுள்ள பிள்ளைகளுக்கு தேவன் விசேஷித்த ஞானத்தை அருள; தில்டெல்காவில் நடைபெற்ற வாலிபர் கூட்டத்தில் கலந்துகொண்ட வாலிபர்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர; ஆலய பராமரிப்புப் பணிகள் விரைவில் முடிய ஜெபிப்போம்.

## நவம்பர் 21 வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜெஹாலின் ஜெமி ஜெயசேகர்
திருமதி. மன்பிரீத் கௌர் அய்யனார்

# ஒடிசா

### ஜகன்நாத்பூர்: பாசுதேவ் மால்தோ & பசந்தி மால்தோ, சுரேஷ் மால்தோ

**துதிக்க:** 14 புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு சுமார் 5190 கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளது. 36 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். வாலிபத் தலைவர்கள் கூடுகை, ஆத்தும ஆதாயப் பயிற்சி, சபை மூப்பர் குடும்பக் கூடுகை ஆகியவை ஆசீர்வாதமாக நடைபெற்றுள்ளது. பாராஜம்தாவில் பயிற்சி மையம் எவ்வித இடையூறுமின்றி கட்டப்பட்டு வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டொன்டோ, புருசாய், மகாடிசை ஆகிய குருசேகரங்கள் மூலம் நடைபெற்ற நற்செய்தி பணியின் மூலம் சந்திக்கப்பட்ட மக்கள் இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று அறிந்து கொள்ள; சங்கர்கோபே கடும் உடல் வலியிலிருந்தும், சுக்லால் லகுரி வலிப்பு நோயிலிருந்தும் சுகம்பெற; மனைவியை இழந்துள்ள தல்பும்கார் விடுதி ஊழியரான பகதூர் முண்டாவின் ஆறுதலுக்காக; ஹோ இன மக்கள் மத்தியில் தேவன் திரளான ஆத்து மாக்களைக் கட்டளையிட ஜெபிப்போம்.

# குஜராத்

### செலம்பா:

### யுவனேஷ் & ஜான்சி ராணி

**துதிக்க:** 67 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 8 பேர் முழு வேதாக மத்தையும், 5 பேர் புதிய ஏற்பாடு புத்தகங் களையும் வாங்கிச் சென்றனர். தேவன் போதுமான மழையைக் கட்டளையிட்டார். சிறுவர் வேதாகம வகுப்புகளில் சிறுவர்கள் அநேகர் கலந்துகொண்டு தேவனைப் பற்றி அறிந்துகொண்டதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நவம்பர் மாதத்தில் நடக்க விருக்கும் வசாவா மேளா சிறப்பாக நடைபெறவும், ஆயிரக்கணக்கானோர் இம்மேளாவில் கலந்துகொள்ளவும், தொடர்ந்து நடைபெறவிருக்கும் வாலிபர் மேளாவில் திரளான வாலிபர்கள் பங்குபெற்று தங்கள் வாழ்வை தேவனுக்கு அர்ப்பணிக்கவும்; இப்பணித்தளத்தில் சிக்கில்செல் அனிமியா நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் நமது விசுவாசிகளை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

### போடோலி: ஏசுபாபு & உஷா

**துதிக்க:** குண்டான்பூரில் நடத்தப்பட்ட உபவாச ஜெபக்கூடுகையில் அநேகர் கலந்துகொண்டு தேசத்திற்காக ஊக்கமாக ஜெபித்தனர். 175 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு கைப் பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. வேதாகம விளக்க வகுப்புகளில் வாலிபர்கள் அநேகர் கலந்துகொள்கிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நீண்ட நாட்களாக சுகவீனப் பட்டுள்ள கோபால்பூரைச் சேர்ந்த ரவீனா சுகம்பெற; கிறிஸ்துமஸ் கால நிகழ்ச்சிகள் எங்கள் கிராமத்தில் நடத்தக்கூடாது என்று இப்போதே எதிர்ப்பு தெரிவித்து வரும் கார்னெட் கிராமத் தலைவர்கள் மனந்திரும்ப; விசுவாசி மிஸ்லி மார்பக புற்றுநோயிலிருந்து குணமடைய; கிராமங்களில் இரவு நேரத்தில் நடைபெறும் கொள்ளை சம்பவங்கள் தடுக்கப்பட; வரும் மாதம் நடைபெறவுள்ள கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சி தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

## நவம்பர் 22 வெள்ளி

### கவாண்ட்:
**அகிலேஷ் குமார் & கிரண்தேவி**

**துதிக்க:** 58 பேர் மலர்ச்சிப்பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். இருசக்கர வாகன விபத்தில் காயமுற்ற பிரவின்பாயை தேவன் குணப்படுத்தினார். தர்சவா கிராமத்தில் புதிதாக ஆராதனைக்குழு துவங்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நீண்ட நாட்களாக ஆஸ்துமாவினால் கஷ்டப்படும் காளிபேனுக்கு தேவன் பூரண சுகமருள; வயிற்றிலிருந்த கட்டிக்காக சிகிச்சைப் பெற்றும் சுகம்பெறாமல் அவதிப்படும் நான்ஜி பாய்க்கு தேவன் அற்புதம் செய்ய; தான்யைபடி கிராமத்தில் எதிர்ப்பின் காரணமாக நிறுத்தப்பட்டுள்ள ஆராதனை மீண்டும் துவங்கப்பட ஜெபிப்போம்.

### ஜாலோத்: குமார் பால் & அமுதா

**துதிக்க:** 45 பேர் இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ளனர். வகேலா கிராமத்தில் விசுவாசி புல்பாயின் இடைவிடாத ஜெபத்தினால் போக்குவரத்துத் துறையில் வேலை கிடைத்துள்ளது. குந்தி கிராமத்தில் பிசாசினால் அலைக்கழிக்கப்பட்ட கணுபாய் ஜெபத்தினால் விடுதலை பெற்றார். ராஜுபாயின் மகளுக்கு இரட்சிக்கப்பட்ட மணமகன் கிடைக்கச் செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பின்னும் தொடர்ந்து பழைய மந்திர வேலைகளை செய்து வரும் ஒப்லா சபையின் வாக்ஜிபாய் அதிலிருந்து விடுபட; அடிக்கடி விசுவாசத்தைவிட்டு பின்வாங்கும் டுங்கர் கிராமத்தின் சுரேந்திரபாய் மனந்திரும்ப; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நாவ்ஜி மற்றும் பூஜாவுக்கு தேவன் பரிபூரண சுகமருள; அடிக்கடி பெலவீனப்பட்டு வரும் புதிய விசுவாசிகளான லால்சிங் மற்றும் அவரது மனைவிக்கு தேவன் பூரண சுகமருள; சரளா, மார்த்தா, பாயல் ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள ஜெபிப்போம்.

### ஃபோக்டி – தலைமைத்துவப் பயிற்சி மையம்:
**ரூபன் ரவி & விஜயராணி ரூபன்**

**துதிக்க:** தலைமைத்துவப் பயிற்சி மையத்தில் கடந்த நாட்களில் சஹாயத்ரி பிராந்தியத்தின் சுதேச ஊழியர்களுக்கான பயிற்சி, மிஷனெரிகளுக்கான ஹாகாய் பயிற்சி கூடுகை, கதைகள் மூலம் சுவிசேஷம் அறிவிக்கும் பயிற்சி ஆகியவை சிறப்பாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கப்ராடா பணித்தளத்தின் சுதேச ஊழியர்களுக்காக நடத்தப்படும் பயிற்சி மிகுந்த பலனைத் தர; தலைமைத்துவப் பயிற்சி மையத்தின் கட்டிட பராமரிப்புப் பணிகள் விரைவில் முடிக்கப்பட; பல்வேறு பயிற்சிகளைப் பெற்றுச் சென்றவர்கள் தங்கள் வாழ்விலும், ஊழியத்திலும் தேவனுடைய மகிமைக்காக அவைகளை பயன்படுத்த ஜெபிப்போம்.

**நவம்பர் 23 சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ஜாஷ்வா K.S.
திரு. ஜாண்பால் ஹாரிஸ் J.

## கோதாவரி பிராந்தியம்:

**பசவராஜா & சன்மதா, பசந்தா குரு**

**துதிக்க:** 62 புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. சென்சாரி மற்றும் ஒசர்வீரா கிராமங்களிலுள்ள 13 பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ளனர். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள 192 பேர் வாஞ்சைக்காட்டுகின்றனர். உதவா, ஒசர்வீரா, ராய்பூர், ஷாரி, உப்லத் ஆகிய இடங்களில் பெண்கள் பயிற்சி சிறப்பாக நடைபெற்றது. விஷபாம்பு கடியிலிருந்து வைஷாலி பேனை தேவன் பாதுகாத்தார். சுவாசப் பிரச்சனையினால் கடுமையாக பாதிக்கப்பட்ட 5 வயது காணேஷ் பாய்க்கு ஜெபத்தின் மூலம் தேவன் அற்புத சுகமருளினார். அசுத்தாவியின் பிடியினால் மனநிலை பாதிக்கப்பட்ட கிருஷ்ணாபாய்க்கு ஜெபத்தின் மூலம் விடுதலை தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தலசாரி பணித்தளத்தில் நடைபெறவிருக்கும் தர்ஷன் சபா கூட்டம் எவ்வித இடையூறுமின்றி ஆசீர்வாதமாக நடைபெற; அசுத்தாவியின் பிடியிலுள்ள வைஷாலி பிரகாஷ்க்கு தேவன் விடுதலைதர; குடிப்பழக்கத்தினால் குடும்பத்தில் பிரச்சனைகள் உண்டுப் பண்ணும் விஜ் மனந்திரும்ப; சைவான் எனுமிடத்தில் ஆலயம் கட்ட நிலவும் தடைகள் நீங்க; விசுவாசத்தைவிட்டு பின்வாங்கியுள்ள விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; ரஷ்மிபேன் வயிற்று வலியிலிருந்தும், வசந்த்பாய் கடுமையான தலைவலியிலிருந்தும், ராமுபாய் பக்கவாதத்திலிருந்தும் சுகம்பெற; சபை மூப்பர்களும், தன்னார்வ ஊழியர்களும் சபையை ஆவிக்குரிய வழியில் நடத்திச் செல்ல ஜெபிப்போம்.

# தாத்ரா & நகர் ஹவேலி

**சில்வாசா: டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்**

**துதிக்க:** நான்கு இடங்களில் நடைபெற்ற விசுவாசத்தை அறிக்கையிடும் நிகழ்ச்சியில் 117 பேர் கலந்துகொண்டு கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு சபையில் இணைந்தனர். இரண்டு இடங்களில் நடைபெற்ற சுதேச ஊழியர்கள் மற்றும் சபை மூப்பர்கள் பயிற்சி முகாமில் 158 பேர் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றுச் சென்றனர். வாசோனா ஆலய விசுவாசிகள் தங்கள் ஈகையினால் ஒரு மிஷெனரியைத் தாங்க முன்வந்துள்ளனர். வராலி கிராமத்தைச் சேர்ந்த அஞ்சுபேனின் கண் பிரச்சனை ஜெபத்தின் மூலம் சுகமானதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குழந்தை பாக்கியத்திற்காகக் காத்திருக்கும் சஞ்சு & சந்திகா, அசோக் & ஜாக்னி, விஜய் & ஜோஷ்னா, சுரேஷ் & ரேணுகா ஆகியோரை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; கிட்லி கிராமத்தைச் சேர்ந்த ஆபாபாயின் மூளையிலுள்ள கட்டி நீங்கி பூரண சுகம் பெற; வரும் நாட்களில் நடைபெறவுள்ள கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சி, ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள் பயிற்சி தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

**நவம்பர் 24**
**ஞாயிறு**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. பியூலா செல்வி ஹென்றி
திருமதி. கிரண் பெங்ரா லவ்லின்

### ராந்தா விடுதி:

**மார்குஸ் மால்தோ & சாரா; சந்திரிகாபேன், மனிஷா லக்ரா, ஏஞ்சல் ராஜ்**

**துதிக்க:** கடுமையான மழை நாட்களில் விடுதிப் பிள்ளைகளை எவ்வித பாதிப்புமின்றி தேவன் பாதுகாத்தார். வெகுதூரம் பயணம் செய்து பள்ளிக்குச் செல்லும் 11-ம் வகுப்பு பிள்ளைகளுக்கு பாதுகாப்பான பிரயாணத்தை தேவன் அருளினார். விடுதி பிள்ளைகள் ஆவிக்குரிய வாழ்விலும், தேவனை அறிகிற அறிவிலும் வளர்ந்து வருகின்றனர். மட்டபோந்தா பணித்தளத்திலுள்ள கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் தந்த திறந்த வாசலுக்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மழைக் காலங்களில் ஏற்படும் தொற்று நோய்களுக்கு விலக்கி விடுதிப்பிள்ளைகளை தேவன் பாதுகாக்க; அடிக்கடி ஏற்படும் சுகவீனத்தினால் பள்ளிக்கு செல்ல இயலாமலிருக்கும் பாதலுக்கு தேவன் பரிபூரண சுகமருள; அறிவியல், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் பின்தங்கியுள்ள 10-ம் வகுப்பு மாணவர்களான யுவராஜ்பாய், டேனியல்பாய், கருணாபேன், பிரமிளாபேன் ஆகியோருக்கு தேவன் விசேஷ ஞானத்தை அருள; புதிய கட்டிடம் கட்ட அரசாங்க அனுமதி விரைவில் கிடைக்க ஜெபிப்போம்.

## மகாராஷ்டிரா

### சாலீஸ்காவ்:

**ஏசுபிரகாஷ் & சுனந்தாபெல்லி**

**துதிக்க:** சாலீஸ்காவ் கிராமத்தில் கடந்த ஆறு வருடங்களாக உடல் வீக்கத்தினால் கஷ்டப்பட்டு வந்த தயாதாய் என்பவர் ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது தேவன் சுகமருளினார். நீண்ட நாட்களாக வயிறு வீக்கத்தினால் அவதியுற்று வந்த ருத்ரஸ்பாய் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றார். விசுவாசி துர்கேஸ் நீட் தேர்வில் நல்ல மதிப்பெண்களோடு தேர்ச்சி பெற்றான். அல்கா, ஜெஸ்னா ஆகியோர் தைராய்டு குறைபாட்டைக் கண்டறிந்து சிகிச்சைப்பெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிசாசின் பிடியில் சிக்கித் தவிக்கும் அஞ்சனா மற்றும் ஆஷா விடுதலைபெற; காதுகளிலிருந்து இரத்தம் வருவதால் அவதியுறும் நான்கு வயது சிறுமிகளான நயாரா மற்றும் ரோகினி பரிபூரண சுகம்பெற; ஜெய்பீம் மக்கள் மத்தியில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; சரீர சுகத்திற்காக மட்டும் ஆலயத்திற்கு வரும் மக்களின் மனநிலை மாறி, முழுமனதுடன் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும் ஜெபிப்போம்.

## நவம்பர் 25 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மிரிலா சம்பிரமரி
திரு. டெப்ரட்டோ பிஸ்வாஸ்
செல்வி. வசாவா அருணாபேன் டாமனியாபாய்

### சுர்கானா:

### மயில்சாமி ஜோசப் & ஏசுமணி

**துதிக்க:** 49 பேர் இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று அறிக்கை யிட்டுள்ளனர். 21 இடங்களில் விசுவாசி களுக்கு நடத்தப்பட்ட குடும்பக் கூடுகையில் திரளான விசுவாசிகள் தங்கள் குடும்பத்துடன் கலந்துகொள்ள தேவன் உதவி செய்தார். ரெக்கட்பாடா சபை மூப்பர் ஹிராமன் பாய் பக்கவாதத்தி லிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்று ஆலயம் வர கிருபை பாராட்டிய தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பத்து வருடங்களாக குழந்தை யின்றி தவித்து வரும் மண்டாபாய் தற்போது ஆலயத்திற்கு வந்து ஜெபித்து வருகிறார், தேவன் அற்புதம் செய்ய; ஹத்கட் கிராமத்தில் நற்செய்திக்கு அநேகர் வாஞ்சைக்காட்டி வருவதால் கிராமத்தில் எதிர்ப்புகள் உருவாகி வருகிறது. எதிர்ப் பாளர்கள் இயேசுவின் அன்பினால் தொடப்பட; இரவுக் கூட்டங்கள் மட்டும் நடைபெற்று வரும் சூர்யாஹட் கிராமத்தில் விரைவில் ஞாயிறு ஆராதனை துவங்கப்பட; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள விசுவாசிகள் அதிலிருந்து விடுதலைபெற ஜெபிப்போம்.

### தலாசரி: கெடாம் ஸ்ரீனிவாசராவ் & ராஜ்யலட்சுமி

**துதிக்க:** 32 பேர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு சபையில் இணைந்தனர். 7 ஆண்டுகளாக கர்ப்பம் தரித்தும் கருசிதைவு ஏற்பட்டு வந்த சோனாலி ராஜேஷுக்கு ஜெபத்தின் மூலம் ஆரோக்கியமான குழந்தையை தேவன் அருளினார். கன்ஜட் கிராமத்தில் நடத்தப்பட்ட பெண்கள் கூடுகையில் அநேகர் கலந்துகொண்டனர். உத்வா, ராய்பூர் மற்றும் உப்லத் கிராமங்களில் பெண்களுக்கான ஆவிக்குரிய கூட்டங்கள் நடத்த கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சைவான் கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் கிடைக்கவும், இக்கிராமத்தைச் சேர்ந்த வைஷாலி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெறவும்; பெண்கள் மத்தியில் சிறு ஜெபக்குழுக்கள் உருவாக்கப்பட்டு தடையின்றி தொடர்ந்து நடைபெற; சபைகளை ஆவிக்குரிய பாதையில் நடத்திட பொறுப்பான சபை மூப்பர்கள் கிடைக்க; வேதாகம விளக்க வகுப்புகளின் மூலம் விசுவாசிகள் வேதத்தை இன்னும் ஆழமாக கற்றுக்கொள்ள; போதைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள வாலிபர்களை தேவன் விடுவிக்க ஜெபிப்போம்.

## பாதுகாக்கும் தேவ தூதர்கள்

*பஞ்சாப் மாநிலம் மன்சா பணித்தளத்தில் டியோட் என்ற கிராமத்தில் சுவிசேஷ ஊழியம் செய்து திரும்பி வந்து கொண்டிருந்த நமது மிஷனெரி குடும்பத்தை கிறிஸ்தவ எதிர்ப் பாளர்கள் சுமார் 10 பேர் சூழ்ந்துகொண்டு நீங்கள் ஏன் மதமாற்றம் செய்கிறீர்கள் என்று கேள்விக்கேட்டு பிரச்சனை செய்தார்கள். இரவு நேரமானதால் மிஷனெரிகள் பயத்தோடு மனதிற்குள் ஜெபித்து கொண்டிருந்தபோது திடீரென அவ்வழியாக சென்ற கார் நமது ஊழியர்களின் அருகில் வந்துநின்றது. அதிலிருந்தவர் நமது ஊழியர்களை காரில் ஏறும்படி கூறி அவர்களது வீட்டிற்கு கொண்டு வந்து சேர்த்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

## நவம்பர் 26 செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. மனாசே டேனியல்

### சோப்டா & சாங்வி விடுதி: வசாவா பாங்சிங் மௌலியா & ஏமன்பேன்

**துதிக்க:** இரண்டு பேர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கை யிட்டுள்ளனர். மூன்று வருடங்களாக வாய்புற்றுநோயினால் அவதியுற்று வந்த பாய்தாஸ் தொடர் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று வருகிறார். உபவாச ஜெபத்தின் மூலம் ராம்தாஸ் காசநோயிலிருந்து குண மடைந்து வருகிறார். நான்கு வருடங்களாக சுகவீனத்தினிமித்தம் கணவனை பிரிந்து வாழ்ந்த சுனிதா ஆலயம் வந்து ஜெபித்ததின் விளைவாக குணமடைந்து கணவருடன் சேர்ந்து வாழ கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அடிக்கடி அசுத்தாவியினால் அலைகழிக்கப்பட்டு வரும் நம் சிறுவர் விடுதியின் சமையல்காரர் மனைவிக்கு தேவன் விடுதலை அருள; படிப்பிலே மந்தமாகவுள்ள விடுதி மாணவர்களுக்கு தேவன் ஞானத்தை அருள; சோப்டா கிராமத்தில் நடக்கவிருக்கும் வாலிபர் முகாம் மற்றும் நற்செய்தி கூட்டங்களில் அநேகர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

### போரடி: ஓம்பிரகாஷ் & சப்னா

**துதிக்க:** மூன்று பேர் மலர்ச்சிப்பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். 12 கிராமங் களில் பின்தொடர்பணி செய்யப்பட்டதோடு 364 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்க கர்த்தர் கிருபை செய்தார். புர்லிகேடா, தண்டுவாடா ஆகிய கிராமங்களில் முதன் முறையாக சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. அம்பாடுங், நவகாவ் கிராம விசுவாசிகளுக்கு ஆத்தும ஆதாயப் பயிற்சி அளிக்கப்பட்டது. கொதிநீரில் விழுந்துவிட்ட சிறுமி ஹர்ஷிதாவுக்கு எண்ணெய் பூசி ஜெபித்தபோது பூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நெஞ்சுவலியினால் அவதியுறும் பேட்டாபாய், கால் புண்களினால் கஷ்டப்படும் மாதுபாய், இரத்தசோகையினால் படுக்கை யிலிருக்கும் லதா & பிரவின், எலும்பு பெலவீனத்தினால் நடக்க முடியாம லிருக்கும் அசோக், யஷ்வந்த், சஹன்பாய் ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகமருள; ஊழியத்தில் உதவி செய்து வரும் ஜெய்சிங், அம்பாராம், அனில், சஞ்சய் ஆகிய வாலிபர்களை தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

### விடுதலை அருளும் தேவன்

*மத்தியப்பிரதேச மாநிலம், காண்ட்வா பணித்தளத்திலுள்ள நாவல்பூரைச் சேர்ந்தவர் பீம்சிங். பிசாசின் பிடியில் சிக்கித்தவித்த இவரது மகள் லக்ஷ்மிக்காக விசுவாசிகள் ஜெபித்தபோது விடுதலை பெற்று சமாதானத் தோடு வாழ்ந்து வந்தார். அதன்பின் விசுவாசத்தை விட்டு பின்வாங்கியதால் மீண்டும் பிசாசின் பிடியில் சிக்குண்டபோது மந்திரவாதிகளிடம் சென்றதால் நிலைமை மிகவும் மோசமானது. கை கால்கள் விரைத்துபோவதும், அவள் பற்களை அவளே பிடுங்கி தன்னை காயப்படுத்திக்கொள்வது மாக இருந்தாள். இந்நிலையில் ஆலயத்தில் நடைபெற்ற உபவாச ஜெபக்கூட்டத்திற்கு லக்ஷ்மியை அழைத்து வந்தபோது விசுவாசிகள் அவளுக்காக ஒருமனதோடு ஊக்கமாய் ஜெபிக்கவே லக்ஷ்மியை ஆக்கிரமித்திருந்த பிசாசு அவளை வெகுநேரம் அலைக்கழித்து பின்பு விலகியது. தற்போது தந்தையும், மகளும் தங்கள் உறவினர்களுக்கு தேவனைக் குறித்து சாட்சி பகிர்ந்து வருகின்றனர்.*

நவம்பர் 27 புதன்

உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. லிங்டின்கிம் ஹயோகிப் லுன்கிம்

## பெயிண்ட் விடுதி & சரஸ்மால் விடுதி:

### அலெக்ஸ் பிரபு & பிரியா கெத்ஸி

**துதிக்க:** 18 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கைச் செய்தனர். பெயிண்ட் பணித்தளத்தின் இரட்சிப்புக்காக ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் இணைந்து இரண்டு நாள் உபவாச ஜெபம் ஏறெடுக்க தேவன் உதவி செய்தார். புதிதாக ஜெபக்குழுவில் கலந்துகொள்ளும் 26 பேரை இரட்சிப்பிற்குள் வழிநடத்த தேவன் கிருபை செய்தார். மூன்று மாதங்கள் உதிரப்போக்கினால் கஷ்டப்பட்டு வந்த கல்பனாவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். உபவாச ஜெபத்தில் கலந்துகொண்ட பிரத்திகாவுக்கிருந்த கடுமையான வயிற்று வலியை சுகமாக்கின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கள்ள உபதேசங்களுக்கும், கள்ள போதகர்களுக்கும் நமது விசுவாசிகளை தேவன் விலக்கி பாதுகாக்க; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்துள்ள விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; போராபாடா கிராமத்தைச் சேர்ந்த ஹிராமன் சிக்கன்குனியாவிலிருந்து சுகம்பெற; விளைச்சலில் நஷ்டம் ஏற்பட்டுள்ள நமது விசுவாசி அனுஷியாவுக்கு தேவன் கிருபை செய்ய; வயிற்றிலுள்ள கட்டியினால் அநேக நாட்களாக துன்பத்தை அனுபவித்து வரும் குஷூம் என்பவருக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

## அக்கல்குவா:

### ஜக்மோகன் சிங் & ஸ்வாதி

**துதிக்க:** முதன்முறையாக 35 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நான்கு இடங்களில் முழு இரவு ஜெபமும், இரண்டு இடங்களில் தேடுவோர் முகாமும் நடத்தப்பட்டுள்ளது. நான்கு பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். மூன்று பேர் புதிதாக ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். ஜெபத்தின் மூலம் தீரஜ் பத்திரமாக வீடுவந்து சேர்ந்தமைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டப்ரியம்பா கிராமத்தில் புதிய ஆராதனைக்குழு விரைவில் துவங்கப்பட; விசுவாசத்தை அறிக்கையிடும் நிகழ்ச்சி தடையின்றி நடைபெற; தன்னார்வ ஊழியர் உஷாபேனின் நரம்புப் பிரச்சனையை தேவன் குணபடுத்த; ரவிதாபேன் மற்றும் சங்கரின் மனைவிக்கு சுகப்பிரசவத்தை தேவன் அருள; கிராமங்களில் நடமாடும் புலிகளிடமிருந்து நமது ஊழியர்கள், விசுவாசிகள் மற்றும் கிராம மக்களை தேவன் பாதுகாக்க ஜெபிப்போம்.

## பரம வைத்தியர் இயேசு

*ஹிமாச்சல் பிரதேசம், மாண்டி மாவட்டத்தின் சர்சோக் பணித்தளத்தைச் சேர்ந்த நமது விசுவாசி வேலை செய்துகொண்டிருந்தபோது பைப் ஒன்று அவரது கழுத்தில் குத்தி உள்ளே உடைந்துவிட்டது. மூச்சுவிட சிரமப்பட்ட அஞ்சு தேவியை மருத்துவ மனைக்கு கொண்டு சென்றனர். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்ய நேரம் குறிக்கப்பட்ட நிலையில் விசுவாசிகள் ஒன்றுகூடி அஞ்சுவுக்காக ஊக்கமாக ஜெபித்துகொண்டிருந்தனர். என்ன ஆச்சரியம்! அறுவை சிகிச்சையின்றி உடைந்த பைப் அவரது நாசி துவாரத்தின் வழியாக வெளியே வந்துவிட்டது. அல்லேலூயா!*

## நவம்பர் 28 வியாழன்

### எட்டப்பள்ளி:

**வசாவே அர்விந்த் காலுசிங் & வால்வி எஜு, ஹோசேன் ஜெராய் & ரேகா, விக்டர் பால்ராஜ் & ஷீலா**

**துதிக்க:** நான்கு பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். சுமார் 480 பேர் முதன்முறையாக சுவிசேஷம் கேட்டுள்ளனர். மார்கல் ஆலயப் பிரதிஷ்டை ஆசீர்வாதமாக நடைபெற்றுள்ளது. கட்டா, கோட்மி, ஜரேவாடா, டோடாசா, நாரானூர் ஆகிய கிராமங்களில் வெளிப்புற சுவிசேஷ ஊழியம் நல்லமுறையில் நடைபெற்றது. அஷ்வின் மட்டாமிக்கு தேவன் சுகப்பிரசவம் அருளினார். சாப்பிடவும், நடக்கவும் முடியாமலிருந்த சுக்லிபாய் கௌடேக்காக ஜெபித்தபோது தேவன் அவரை குணப்படுத்தி, ஆலயத்திற்கு நடந்து வர கிருபை செய்தார். இரத்த சோகையினால் அடிக்கடி மயங்கிவிழும் ருபேஷ் மாதவி ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றாள். ஆலயத்தின் சுற்றுச்சுவர் விசுவாசிகளின் பொருளுதவியினால் நல்ல முறையில் கட்டிமுடிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் சிரங்கி மட்டாமி குடும்பம் இரட்சிக்கப்பட; வயிற்று கட்டியிலிருந்து அஷ்வினி துல்ஷாவும், புற்றுநோயிலிருந்து கார்த்திக் மண்டலும், காச நோயிலிருந்து சுக்லிபாய் கௌடேயும் பரிபூரண சுகம்பெற; குடி மற்றும் புகையிலைக்கு அடிமைப்பட்டிருக்கும் கிராம மக்களை தேவன் விடுவிக்க; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்துள்ளோர் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; பல்வேறு வியாதிகளினால் அவதியுறும் சமீர் புங்கட்டியை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

## ஆந்திரப் பிரதேசம்

### பலமநேர்:

**பால் குப்புசாமி & ஷைலா**

**துதிக்க:** பலமநேர் சபையில் ஒருவர் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். கொலமாசனப்பள்ளி ஆலயத்தில் நடைபெற்ற சபை மூப்பர் பயிற்சியில் 25 பேர் கலந்துகொண்டனர். வீட்டினில் புகுந்த மலைப்பாம்பிடமிருந்து யசோதாவை தேவன் பாதுகாத்தார். ஹேமலதாவின் தந்தை தவறுதலாக தண்ணீரில்லாத கிணற்றில் விழுந்த போதிலும் ஆபத்தின்றி பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் அனிதா, கலாவதி, பாலா, ராஜேந்திரா, தேவி, மதுமதி, அம்மு ஆகியோர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்ய; கன்ட்ரியா கிராமத்தில் ஆராதனை நடத்த ஏற்ற இடம் கிடைக்க; சுப்பையா குடிப்பழக்கத்திலிருந்து விடுதலைபெற; மனைவி மற்றும் பிள்ளைகளை விட்டு பிரிந்து சென்றுள்ள கணேஷ் மீண்டும் குடும்பத்துடன் சேர்ந்து வாழ; மாந்தோட்டம் வாங்கித்தருவதாக கூறி நமது விசுவாசி ராமன்னாவிடம் பணம் பெற்று ஏமாற்றியவர் மனந்திரும்பி, பணத்தை திருப்பிக்கொடுக்க ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. மகேஷ் R.

## தாமலச்செருவு:

**ஜாண் டேவிட்ராஜ் (ஓய்வு) & ஞானசேகரி,**
**அனில் மஹாலி & பிரசாந்தி**

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கவும், எட்டு கிராமங்களில் பின்தொடர்ப் பணிகள் செய்யவும் கர்த்தர் கிருபை செய்தார். பாட்டூர் ஆலய ஆராதனையில் புதிதாக இரண்டு குடும்பங்கள் கலந்துகொள் கின்றனர். புத்தலபட்டு கிராமத்தில் எஸ்தர் லாவன்யாவின் கர்ப்பப்பைக் கட்டி ஜெபத்தின் மூலம் மறைந்துள்ளது.. கொத்தூர் ஆலயத்தில் புதிதாக துவங்கப்பட்டுள்ள வேதாகம வகுப்பில் விசுவாசிகள் உற்சாகத்துடன் வேதத்தை கற்று வருகிறார்கள். ஜெபத்தின் மூலம் யோபு பிரசாத், ராம மூர்த்தி ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தன்னார்வ ஊழியராக இணைந்திருக்கும் பால்முனிசாமியை தேவன் வல்லமையாய் பயன்படுத்த; மனைவியின் விசுவாசத்திற்கு தடையாயிருக்கும் ஜெகன்நாத் மற்றும் மகன்கள் ஜெயபிரகாஷ், லோகேஷ் மனந் திரும்பி இரட்சிக்கப்பட; மனைவியைவிட்டு பிரிந்து வாழும் கங்குலய்யா குடும்பத்துடன் சேர்ந்து வாழ; விசுவாசி நாகலக்ஷ்மியின் கணவர் தேவராஜ் குடிப்பழக்கத்தி லிருந்து விடுபடவும், குடும்பத்தில் சமாதானம் நிலவவும்; ஷாலினிக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; கருச்சிதைவு ஏற்பட்டுள்ளதால் மனசோர்விலிருக்கும் ராதா மற்றும் ஷைலாவுக்கு தேவன் ஆறுதல் தர; சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் கிராமத் தலைவர் மனந் திரும்ப ஜெபிப்போம்.

## நல்லமாடா:

**தினேஷ் மறையா & மேரி முர்மு**

**துதிக்க:** ஐந்து புதிய கிராமங்களில் சுமார் 788 பேருக்கு நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். வாலிபர் பயிற்சியில் ஆறு பேர் கலந்துகொண்டனர். இரண்டு கிராமங்களில் தேடுவோர் முகாம் நடத்தப்பட்டது. பெங்களூருக்கு வேலைக்குச் சென்ற லலிதாவின் மகன் சந்தனா வீட்டிற்கு திரும்பி வர மறுத்த நிலையில் ஜெபத்தின் மூலம் வீட்டிற்கு வர தேவன் உதவி செய்தார். நல்லமாடாவில் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் 15 பேரும், சபை மூப்பர்களுக்கான பயிற்சியில் 7 பேரும் கலந்துகொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சந்தனா தன் பெற்றோரை அக்கறையுடன் கவனித்துகொள்ள; தற்கொலைக்கு முயற்சி செய்த ராமா புரத்தைச் சேர்ந்த நந்தேக் தேவனுடைய சித்தத்திற்கு தன் வாழ்வை அர்ப்பணிக்க; லக்ஷ்மி தேவி, ஹர்ஷா, கங்கலேம்மா, நர்ஷிமுலு, அம்ருதா ஸ்ரீ, சிந்துஜா, லோகேஷ், விசுணு மற்றும் அனுதேபா தேவனின் இரட்சிப்பை பெற்றுக்கொள்ள; ஜம்யக்காவின் நிலம் நல்ல விலைக்கு விற்கப்பட; ஐந்து ஆண்டுகளாக பிசாசின் பிடியினால் அவதிப்பட்டுவரும் மரியம்க்கு தேவன் விடுதலைத் தர ஜெபிப்போம்.

## நவம்பர் 30 சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சுகந்தி புஷ்பம் ஜென்னிஸ்

# தமிழ்நாடு

## தென் மண்டலம்:

### பால்தயாசிங் & பெனில்டா

**துதிக்க:** அந்தேவனப்பள்ளி ஆலயத்தின் 14வது ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற்றது. ஜெபத்தினால் எப்சிபாராஜா குடும்பத்தில் தேவன் சமாதானத்தைக் கட்டளையிட்டார். அஞ்செட்டி பணித்தளத்தில் மூன்று கிராமங்களில் சுமார் 150 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. விசுவாசி இம்மானுவேலை வாகன விபத்திலிருந்து தேவன் பாதுகாத்தார். ஆறு மாத ஜெபத்திற்குப் பின் மணி & எஸ்தர் குடும்பம் ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். பெரியமலை தலைமைத்துவப் பயிற்சி மையத்தில் வாலிபர்களுக்கான பயிற்சி, சிறுவர் கூடுகை, வேத வகுப்புகள் சிறப்பாக நடைபெற்றன. சுவிசேஷத்தை வாஞ்சையோடு கேட்ட ரமேஷ், சரவணன், வீரராகவன் ஆகியோரின் குடும்பங்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கணவனை இழக்கக் கொடுத்துள்ள ரூத் அம்மாவின் ஆறுதலுக்காக; அம்பிகா குடும்பம், வெட்டவலம் பணித்தளத்தின் கிருஷ்ணன், விக்கிரம், பாண்டியன், நாகப்பன், ஜானகி, செல்வி, வைஷாலி, இளம்பிள்ளை பணித்தளத்தின் சரவணன், ராணி, மணி, மாரியம்மா, கார்த்தி, தேவி, வித்யா, ரமேஷ், மோகனா ஆகியோர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; சிறுவர் ஊழியத்திற்கு இடையூறு விளைவிக்கும் மோனிஷா மனந்திரும்ப; ஓலைபாடி கிராமத்தில் சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டுள்ள 3-ம் வகுப்பு படிக்கும் ரஜினிக்கு தேவன் அற்புத சுகமருள; வள்ளியம்மாள் & விஜய லக்ஷ்மி-இருதய நோய், எஸ்தரம்மா, விக்டோரியா & ஹில்டா-சிறுநீரகப் பிரச்சனை, தாராபாய்-புற்றுநோய், சுசீலா, சௌதாமணி, சாம்ராஜ்-சர்க்கரை நோய், சாந்தி-மன அழுத்தம் & பயம் ஆகியோருக்கு தேவன் சுகத்தையும் விடுதலையையும் கட்டளையிட ஜெபிப்போம்.

## வார்லி மொழிபெயர்ப்புப்பணி:

### ஆபிரகாம் ஜி. & ஹேமலதா

**துதிக்க:** மத்தேயு சுவிசேஷ புத்தகம் டாவரி மொழியில் மொழி பெயர்க்க தேவன் உதவி செய்தார். 8000 வார்த்தைகள் கொண்ட சொல் அகராதியை வார்லி மொழியில் தயாரிக்க தேவன் கிருபை செய்தார். செப்டம்பர் மாதம் மிஷனெரி பயிற்சி மையத்திலுள்ள புதிய மிஷனெரிகளுக்கு இந்திய மனிதர்களின் கலாச்சாரம் குறித்த மனிதவியல் வகுப்புகள் நடத்த தேவன் உதவி செய்தார். வார்லி மொழியில் முதியோர் கல்வித்திட்ட புத்தகங்களை மராட்டி எழுத்து வடிவில் தயாரிக்கும் பணி தொடங்க உதவி செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வார்லி மொழியில் சங்கீதம், நீதிமொழிகளுடன் கூடிய புதிய ஏற்பாடு வெளியிட நடைபெறும் பணிகளுக்காக; வார்லி மொழியில் பாடல் புத்தகம் மறுபடியும் அச்சடிக்கப்பட; மொழி உதவியாளர்களின் உதவிக்காகவும், அவர்களின் சுகத்திற்காகவும் தொடர்ந்து ஜெபிப்போம்.

# 400 மிஷனரி ஆல்பம்

மிஷனெரி அருட்திரு. சுனில் குமார் அவர்கள், கர்நாடகா மாநிலம், ராய்ச்சூர் மாவட்டத்திலுள்ள கோரேபாடு கிராமத்தில் வசித்து வந்த டாக்டர் ரவிகுமார் & திருமதி சகுந்தலா ஆகியோருக்கு மூத்த மகனாக 02.05.1984 அன்று பிறந்தார். கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்த இவருக்கு வருங்காலத்தில் ஒரு காவல்துறை அதிகாரியாக வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. ஆனால் 12-ம் வகுப்பில் ஒரு பாடத்தில் தோல்வியடைந்ததினால் மனசோர்புக்குள் தள்ளப்பட்டார். இந்நிலையில் இந்திய இவாஞ்சலிக்கல் திருச்சபையைச் (ECI) சேர்ந்த சுவிசேஷ குழுவினர் இவரது வீட்டிற்கு வந்தபோது இவரையும் ஊழியத்தில் உதவும்படி கேட்டுக்கொண்டனர். 1999இல் அக்குழுவினரோடிருந்த நாட்களில் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டதுடன் ஆத்தும பாரமும் பெற்றவராய் ஊழியத்திற்குத் தன்னை அர்ப்பணித்தார். இ.சி.ஐ. திருச்சபையுடன் இணைந்து ஊழியம் செய்து வந்த நாட்களில் கர்நாடகாவைச் சேர்ந்த மிஷனெரி மறைந்த திரு. நாராயண் நாயக் மூலம் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியத்தைப்பற்றி கேள்விப்பட்டு நம் இயக்கத்தில் சிறிது காலம் சுதேச ஊழியராக பணிசெய்து 2006இல் முழுநேர மிஷனெரியாக இணைந்தார். ஜான்சியில் மிஷனெரி பயிற்சி பெற்றப்பின் மத்தியப்பிரதேசத்தில் வாழும் பீல் மற்றும் பரேலா மக்கள் மத்தியில் ஊழியம் செய்தார்.

மிஷனெரி சகோதரி சங்கீதா லாலுடேகம் மஹாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த மறைந்த திரு. லாலு டேகம் & திருமதி லங்காபாய் என்பவர்களுக்கு மகளாக 06.07.1983 அன்று பிறந்தார். கொலாமி இனத்தைச் சேர்ந்த இவரது பெற்றோர் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முதல் விசுவாசிகள். 1996ஆம் ஆண்டு நமது மிஷனெரிகள் திரு. பி. மாசிலாமணி மற்றும் திரு. ஸ்டான்லி சார்லஸ் மூலம் ஊழியம் செய்ய உற்சாகப்படுத்தப்பட்டு சென்னை அந்தியோக் வேதாகம கல்லூரியில் பி.டி.எச். முடித்தார். 2009இல் முழுநேர மிஷனெரியாக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் இணைந்தார். 16.05.2010-ம் தேதி அன்று அருட்திரு. சுனில் குமார் அவர்களுடன் திருமணத்தில் இணைக்கப்பட்டார். அதன்பின் மஹாராஷ்டிராவின் கொர்க்கு இன மக்கள் மத்தியில் குடும்பமாக பணிசெய்தனர். 2013 முதல் கர்நாடகா மாநிலத்திலுள்ள சிராஹட்டி மற்றும் சிகாவன் பணித்தளங்களில் குடும்பமாக ஊழியம் செய்து வந்தனர். மார்ச் 2024 முதல் ஹுப்ளி பிராந்திய செயலராக பொறுப்பேற்று ஊழியம் செய்து வருகின்றனர்.

தேவன் இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகளைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். மூத்த மகள் ஷாரோன் குளோரியா (07.04.2011) 9-ம் வகுப்பும், இளைய மகள் ஸ்டார்லினா (24.02.2014) 6-ம் வகுப்பும் டோனாவூரிலுள்ள சந்தோஷ வித்யாலயாவில் படித்து வருகின்றனர். இம்மிஷனெரி குடும்பத்தை நம் ஜெபத்தில் தாங்குவோம்.



அருட்திரு. சுனில் குமார் & திருமதி சங்கீதா லாலுடேகம்

Regd. Newspaper for India No.17759/69




# இப்பொழுது விற்பனையில்

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் வெளியீடுகள்

## திருச்சபையின் பணி என்பது அருட்பணி

இப்பணியை நிறைவேற்றுவதில் திருச்சபை
எதிர்கொள்ளும் சவாலைப்பற்றி விவரிக்கும்
**அருமையான புத்தகம்**

**வாங்கிப் பயன் பெறுங்கள்!**

*தொடர்பு:* தகவல் தொடர்புத்துறை 9445115757

தற்கால கிறிஸ்தவ சமூகத்திற்குத் தேவையான ஒரு புத்தகம் ***– திரு. ரெஜினால்ட் பிரபாதாஸ்***

திருச்சபை நாட்டும் மிஷனெரிப் பணியினை நிறைவேற்றி வரும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முதுகெலும்பாக இருந்து செயல்பட்டு வரும் ஜெபக்குழு தலைவர்களுக்கும், அங்கத்தினர்களுக்கும், திருச்சபைக்கும் இந்நூல் ஒரு தூண்டுகோலாக அமையும் ***– மறைதிரு ஜாண் பெர்லின்***

# நிதி அலுவலகத்திலிருந்து




## இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விபரங்கள்

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

**ICICI** - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb01@icici**

**SBI** - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

**Indian Bank** - A/c No. 406157474 - IFS Code IDIB000A599 - Branch: Vijayalakshmipuram, Ambattur

*தொடர்பு கொள்ள:* **finance@fmpb.org, WhatsApp: 7904648270**

## காணிக்கை அனுப்புவதற்கு பார்கோடு வசதி

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களைத் தாங்கி வருகிற தாங்கள் தேவையானால் பார்கோடு வசதியையும் பயன்படுத்திக் கொள்ள பட்சமுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***